பாரதமணி

ஆசிரியர்: கே. எஸ். வெங்கடரமணி

சுபானு ௵
வைகாசி ௴

விஸ அணு 4

MAY
1943

ஸர். எம். வேங்கடசுப்பராவ்.

THE BHARATA MANI-MAYAVARAM

அவன் எங்கெங்கே இருந்தாலும்
'அழுக்கு அபாய' த்திலிருந்து
காப்பாற்றப் படுகிறான்

எந்த இடத்தில் வேடிக்கை நடக்கிறதோ, அவ்விடத்தில் அவனை முதலில் காணலாம்! அவனுடைய தாயாருக்கு அவன் எங்கே போயிருக்கிறான் என்பது தெரியாது; ஆனால் அவன் வீடு திரும்பும்பொழுது அவன் உடம்பு முழுதும் அழுக்கு பூசி இருக்கும் என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். அவன் 'அழுக்கு அபாய'த்திலிருந்து ரக்ஷிக்கப்படுகிறான் என்று தெரியாமல் இருந்தால் அவளுக்கு எவ்வளவு கவலையுண்டாகும். அநேக வருஷங்களுக்கு முன் அவளுக்கு டாக்டர் அழுக்கிலிருந்து கிருமி கீடகங்கள் உண்டாகின்றன என்று சொல்லியிருக்கிறார். அவர் தவறாமல் குழந்தைகளை லைப்பாய் சோப்பினால் ஸ்நானம் செய்வித்தால் அப்படிப்பட்ட அபாயங்களிலிருந்து காப்பாற்றலாம் என்றும் விளக்கியிருக்கிறார். லைப்பாய் ஓர் விஷ நிவாரண சோப். லைப்பாய் சோப் ஆரோக்யத்தை ரக்ஷிக்கும் தன்மையுள்ளது.

லைப்பாய் நல்ல ஸோப்பைக்
காட்டிலும் சிறந்தது அதுஒருநல்லவழக்கம்

இப்பொழுது மெழுகுத் தாளினால் சுற்றி விற்கப்படுகிறது

L. 48-50 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
45, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

இருபுறம் மங்கையர் மருவிடும் கந்தா
குருகுஹா செந்தமிழ்க் கருள்சிவன் மைந்தா — "கிரன்"

மாலை 9	MAY 1943 :: சுபானுஸு வைகாசிமீ	முத்து 5

பொருளடக்கம்

	விஷயம்.			பக்கம்
1	ஸர் எர். வேங்கடசுப்ப ராவ்	....	கா. சி. வேங்கடரமணி	130
2	சங்கீதத்தின் இதயம்	....	கே. எஸ்.ராமஸ்வாமி சாஸ்திரி	131
3	பக்தி	....	கே. என். லலிதா சுப்பிரமணியம்	135
4	நிரமாலைப் பகுப்பு முறை	....	டி. பி. நவநீதகிருஷ்ணன்	137
5	கூகைக்குக் காகை மேல்	....	ரா. சந்திரசூடன்	141
6	சந்திராஷ்டமம்	....	எல். ஆர். வி.	144
7	உஸ்தாத் மஜ்லிஸ்கான்	....	எஸ். குஞ்சிதபாதம்	148
8	மாவித்துக்கள் ஆகாரமாகின்றன	....	கண்ணன்	156
9	மதிப்புரை	....		158

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

ஸர். எம். வேங்கடசுப்ப ராவ்

கா. சி. வேங்கடரமணி.

புரொபசர் கே. சுந்தர ராமனுக்குப் பிறகு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நண்பர் ஸர் எம். வேங்கட சுப்ப ராவ். எதற்கும் அஞ்சாத தைர்யம். நியாயத்திலே பிறந்து வளர்ந்த மனப் பான்மை. எல்லா விஷயங்களிலும் ஆழ்ந்த ஆலோசனை. சாந்தப் பிரகிருதி. விசாலமான மனோபாவம். அல்பபுத்தியே கிடையாது. கருணையில் மூழ்கிய இதயம். சலிப் பில்லாத விடா முயற்சி. சில்லறை விஷயங்களைக் கூட தீரத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற அவா. எதையும் ஆராய்ச்சி முறையில் ஊக்கத் துடன், உணர்ச்சியுடன் திருந்தச் செய்யும் நோக்கம். நுனிப் புல் மேய்ந்து அகட விகடம் செய்து ஜெயித்துக் களிக்கும் தன்மையில்லை. ஏழைகளுக்கும் பொது மக்களுக்கும் உழைத்து, அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் பெறும் வழியைத் தேடுவதிலே கண். நிர்மாண வேலையில் ஊக்கம். செயலால்தான் பேசிப் பரிமளிக்கவேண்டும் என்கிற கொள்கையைக்குடிகொண்டவர். 'தான்' என்ற அகமே கிடையாது. எவரையும் கேட்டு விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவா உள்ளவர். பிறரோடு ஒத்துழைக்கும் தன்மை வாய்ந்தவர். சிநேகத்திற்கு உத்தமர். தியாக புத்தி. பொதுமக்களுக்காக இவர் ஏராளத் தியாகம் செய்தவர். நாட்டின் புத்துயிருக்கு பெண்மணிகளின் கல்வித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டவர். சென்னையில் மிக்க சிறப்புடன் நடைபெற்றுவரும் **"சேவா சதனம்"** இதற்குச் சாட்சி.

2

1878௵ ஜூலை ௴ 18வயில் 'கட்டாக்' நகரத்தில் பிறந்தவர். இவர் சொந்த ஜில்லா நெல்லூர். பிறப்பில் ஆந்திரர்; நடப்பில் இந்தியர். 1903-வது வருஷத்தில் சென்னை ஹைக்கோர்ட்டில் வக்கீலாகப் பதியப்பட்டார். 1921ம் வருஷத்தில் மிக்க இளம்பிராயத்தில் 43வது வயதில் ஜட்ஜ் பதவியை அடைந்தார். இவ்வளவு சிறுவயதில் இத்தனை உன்னதப் பதவியை இவர்தான் அடைந்திருக்கிறார் என்று எண்ணுகிறேன். மேற்படிப் பதவியைப் பதினேழு வருஷகாலம் மிக்க உயர்தரமாய் ஒருவருக்கும் பயம், தாட்சண்ய மன்னியில் நியாயத்தையே தெய்வமாக நம்பிக் கொண்டாடி வகித்து வந்தார். இரண்டு தடவை 1935, 36ல் 'சீப்ஜட்ஜா'கவும் நிர்வாகம் செய்துவிட்டு 1938வது வருஷத்தில் ஓய்வுபெற்றார். பிறகு 1940 லிருந்து 42 வரையில் ஹைதராபாத்து சமஸ்தானத்திற்கு **ஏஜண்ட்** என்னும் ஓர் உன்னதப் பதவியை வகித்தார். வருங்காலத்தில் இவருக்கு இன்னும் உயர்தரப் பதவிகளை நாம் எதிர்பார்ப்பது வீண்போகாது.

3

இவர் வாழ்வில் வெற்றிக்கு முக்கியமான குணங்கள் இரண்டு உண்டு. எந்தக் காரியத்தை எடுத்தாலும் நியாயத்திலேயே ஒட்டிச்செல்லும், செய்யும் மனப்பான்மையும் அன்பும். இரண்டாவது, நட்பிலே நாடி நிற்கும் உயிர்; 'ஒரு உண்மையான சிநேகிதர் இருந்தால் உலகத்தையே ஜெயிக்கலாம்; நட்பு, பூனைக்கும் ஒரு யானை பலத்தைக் கொடுக்கிறது' என்ற நம்பிக்கை.

சுமார் இருபத்தி ஐந்து வருஷகாலமாய் நான் ஸர் எம். வேங்கடசுப்ப ராவை நன்கு அறிவேன். பல இடங்களில் காணாத சில அரிய குணங்களை இவரிடம் நான் கண்டு களித்திருக்கிறேன். இம்மாதிரியான குணங்களல்லவோ நமது நாட்டுக்குப் புத்துயிரளிக்கும்! இப்படிப்பட்ட தலைவர்களல்லவோ அரசியலில் கலக்கவேண்டும்! பிரிட்டிஷ்

அரசியல் வாழ்வில், இப்படிப்பட்ட தன்மை வாய்ந்தவர்களை எப்படியாவது கொண்டுவந்து சேர்த்துவிடுகிறார்களே; நமது நாட்டில் மாத்திரம் இத்தன்மை வாய்ந்தவர்கள் ஏன் அரசியலினின்றும் விலகி நிற்கிறார்கள்? உயர்தர மனப்பான்மையும் சிறந்த குணமும் உள்ளவர்களை நாம் நிர்ப்பந்தம் செய்தாவது அரசியலில் அவதரணம் செய்யும்படியாக முயலவேண்டும். இல்லாவிட்டால் நமக்குப் புத்துயிர் ஏது?

நமது தேசம் சுராஜ்யம் பெற்றுத் தேசிய சர்க்கார் ஏற்படும் சமயத்தில் ஸர் எம். வேங்கடசுப்ப ராவுக்கு ஓர் உயரிய ஸ்தானம் உண்டென்பது என் நம்பிக்கை. அவர் இதுவரையில் செய்து வரும் தொண்டு மாசற்ற தொண்டு. தைரிய லட்சுமியைக் கைகொண்டு தன் மனச்சாட்சிக்கு விரோத மன்னியில் எதையும் நடத்தக்கூடிய திறமை வாய்ந்தவர். ஈசனருள் இவரிடம் எப்பொழுதும் நிற்க.

சங்கீதத்தின் இதயம்

தீவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி.

சங்கீதம் நம்முடைய தாய்நாட்டின் அழகுக் கலைகளின் உச்சியில் விளங்குகிறது. அதைப் பல்லாண்டுகளாக வளர்த்துப் போற்றிப் பெருக்கி நம்முடைய முன்னோர்கள் பாராட்டி வந்திருக்கின்றார்கள். அதைப் பேரின்பத்துடன் இசைத்து மோக்ஷசாதனமாகச் செய்து வந்திருக்கின்றார்கள். பூர்விக காலங்களில் சம்ஸ்கிருத மொழியில் சங்கீதம் பிரகாசித்தது. ராமாயணத்தைக் குசலவர்கள் கானம் செய்தார்கள் என்பது மூதுரை. இத்தகைய கலைமுறையில் உள்ள சங்கீதம் (Art music) தவிற நாடோடியான முறையில் உள்ள சங்கீதமும் (Folk music) தாய்மொழியில் விளங்கி வந்தது. ஒவ்வொன்றிலும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. பிறகு தென்னாட்டில் சங்கீதம் தியாகய்யர் காலத்தில் ஒப்புயற்வில்லாத உயர் நிலையை அடைந்தது. அவருடைய தாய்மொழி தெலுங்கு. ஆனால் பிறந்த இடம் தமிழ் தேசம். அவர் தன்னுடைய பக்தியாலும் கல்பனை சக்தியாலும் கர்னாடக சங்கீதத்தை உலகம் போற்றும்படிச் செய்தார். அவருடைய தாய்மொழி தெலுங்கானதால் அவருடைய சங்கீதத்தில் சாகித்யம் தெலுங்காக ஏற்பட்டது. அவருடைய தெலுங்கும் எளியநடையில் இருந்ததால் எளிதில் பொருள் விளங்கும்படி இருந்தது. புலவர் தமிழாக ஏற்படுத்தித் தமிழையே தமிழர்களுக்குப் புலப்படாத வண்ணமும் செய்யலாம். தெலுங்கர்களும் தமிழர்களும் தென்னாட்டில் கூடி வாழ்வதால் தெலுங்கை விளக்கமான முறையிலும் பாடலாம். தியாகய்யருடைய கலைத்திறனால் அவருடைய கிருதிகள் தெலுங்காயிருந்தாலும் தமிழ் நாடு முழுவதும் பரவி விட்டன.

ஆனால் இப்பொழுது தமிழிலேயே உயர்ந்தகீதமமைத்துக் கலையைத் தமிழில் வளர்க்கவேணும், கச்சேரிகளில் தமிழ் பாட்டுக்குத் தகுதியான இடம் கொடுக்க வேணும் என்ற எண்ணம் எழுந்திருக்கின்றது. அது முறையான எண்ணம் என்பதை மறுக்கமுடியாது. ஒவ்வொரு நாட்டிலுள்ள கலைகள் அந்நாட்டின் தாய் பாஷையில் பிறந்து வளர்ந்து மேன்மை அடைவதுதான் உயர்ந்தமுறை.

இவ்வருஷம் மார்கழி மாதத்தில் சென்னையில் சங்கீதத் திருவிழாவில் ஒரு விநோதம் ஏற்பட்டது. சங்கீத சபை (music academy)யின் திறப்பு விழாவில் மாஜி சென்னை உயர்தர நீதிபதி ஸர். எம். வெங்கடசுப்பராவும், கலைச் சங்கத்தில் (The Fine Arts Society) செட்டிநாடு ராஜா அவர்களும் சங்கீத உலக நோக்கங்களை வெவ்வேறு விதமாக உணர்ந்து நோக்கிப் பேசினர்கள். சங்கீத சபையின் பட்டமளிப்பு ஸதஸ்ஸில் தலைவராக இருந்த ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரிகள் அவ்விருவர் நோக்கங்களையும் ஒன்றுபடுத்த முயன்றார். இசை (Concord) விஷயத்தில் இவ்வளவு எண்ண வேற்றுமை (Discord) இருப்பதுதான் விநோதம். அவ்வேற்றுமை சங்கீத சாஹித்யங்களின் உண்மையை விமர்சனம் செய்தால் போய்விடும். ஸர். எம். வெங்கடசுப்பராவ் அபிப்ராயத்தில் "இந்தியக் கலைகளின் முன்னேற்றத்திற்காக சங்கீதத்தில் இந்த பாஷைதான் பொருத்தம் என்ற விஷயத்தை ஆராய்ச்சி செய்து அபிப்ராய வேற்றுமை வைத்துக்கொள்வதை விட்டுவிடவேண்டும் என்றும், தமிழர் தெலுங்கர் ஒற்றுமைக்காகத் தெலுங்குப் பாட்டுகளைப் பாடக்கூடாது என்ற கட்டுப்பாட்டை விட்டுவிடவேண்டுமென்றும், தெலுங்கு, சங்கீதத்திற்காகப் பொருத்தமுள்ள மொழிகளில் உயர்ந்தது" என்றும் சொன்னர். வெங்கடராம சாஸ்திரிகள் அவர்களும் அதே அபிப்ராயத்தைத் தழுவிப் பேசினர். ஆனல் செட்டிநாடு ராஜா அவர்கள் சொன்ன உண்மைகளையும் நாம் நன்குணரவேண்டும். அவர் சங்கீதத்திற்கு அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில்செய்திருக்கும் தொண்டு ஒப்புயர்வற்றது. பாட்டைத் தாய்மொழியில் பாடிைல்தான் உள்ளக் கவர்ச்சி ஏற்படும் என்றும், அப்படி ஏற்பட்டால்தான் பாட்டின் கருத்தை உணரமுடியும் என்றும், கருத்தை உணர்ந்தால்தான் கலை இன்பத்தையும் நன்ருக உணர்ந்து கலை முன்னேற்றத்தையும் நிலைபெறச் செய்யலாம் என்றும் சொன்னர். அதுவுந் தவிற மற்ற மொழிகளில் உள்ள பாட்டுகளையுங் கேட்டால்தான் கலை அறிவு விரிந்து கலை முன்னேற்றமும் ஏற்படும் என்றும் கூறினர். ஆனல் தமிழ்நாட்டில் தமிழ் பாட்டுகளுக்கு அதிகமாக இடம் கொடுப்பதுதான் பொருத்தம் என்று அவர் கொள்கை.

நம்மைப்போல் நாடோடியாக உள்ளவர்களுக்கு இவர்களுக்குள் என்ன மர்மமான எண்ண வேற்றமை இருந்தது என்று கண்டுபிடிப்பது எளிதல்ல. ஆனல் ஸர். எம். வெங்கடசுப்பராவ் சொன்னதில் ஏற்பட்ட இரண்டு தவறுகளால் தான் இந்த விவாதம் ஏற்பட்டது. தமிழ் பாட்டுகள் தமிழ்நாட்டில் அதிகமாகப் பாடவேண்டும் என்ற இயற்கையான பிரச்னை அவருக்கு எதோ அரசியல் வாதங்கள் சம்பந்தமாயிருக்குமோ என்று தோன்றியது ஒரு தவறு. தெலுங்கு தமிழைக் காட்டிலும் ஸங்கீதத்திற்கு எடுத்தது என்ற கொள்கை மற்ருெறு தவறு. வெங்கட்ராம சாஸ்திரிகள் இதாலி தேச மொழி ஜர்மனிதேச மொழி முதலிய திருஷ்டாந்தங்களைக் காட்டியதும் பொருத்தமில்லை. வட மொழி (ஸம்ஸ்கிருதம்) வட இந்தியா மொழிகள், தென் இந்தியா மொழிகள். எல்லாம் பக்திக்கும் கலைக்கும் பொருந்தி வெகுகாலமாக அவைகளுக்குத் தொண்டு செய்து வந்திருக்கும் மொழிகள். அவைகளில் குறை ஒன்றும் இல்லை. சங்கீத வித்வான்களுடைய பாட்டு அமைப்புகளிலும்ராகபாவதாளங்களின் அழகுகளிலும் உயர்வு தாழ்வு ஏற்படலாமே யொழிய அம்மொழிகளில் ஒரு குறையுமில்லை.

தெலுங்கர்களும் தமிழர்களும் மட்டும் ஒத்து வாழ்ந்தால் போதுமா? எல்லா மொழிகளைப் பேசப்பட்டவர்களும், எல்லா வகுப்புகளையும், ஜாதிகளையும், மதங்களையும், சேர்ந்தவர்களும் நம்முடைய பாரதநாட்டில் ஒத்து வாழவேணும். ஆகையால் கன்னடம், மலையாளம், மகாராஷ்டிரம், ஹிந்தி, பங்காளி முதலிய பாஷைகளில் எல்லாம் பாடி ஆகவேணும் என்று கட்டாயப்படுத்துவது தகுமா?

நாட்டின் ஒற்றுமை கலையின் முன்னேற்றம் முதலிய முக்கிய நன்மைகளுக்கு இதுவா காரணம்? ஒவ்வொரு தேசிய பாஷையில் உள்ள கலையின் பெருமையை உணர்ந்து அத்தகைய கலையின் பெருமைகள் பாரதீய சமுதாயக் கலையின் அங்கங்கள் என்று அறியவேண்டியது இன்றியமையாததுதான். அந்த உண்மையை ஆராய்ச்சி மூலமாகவும் அப்யாசத்தாலும் அறியவேணும். அதற்கும் சங்கீதக் கச்சேரி முறைக்கும் என்ன தொடர்பு?

சங்கீதமும் ஸாஹித்யமும் சேரும்பொழுது முற்காலங்களில் ஸாஹித்ய பிரதானமாக சங்கீதக்கலை இருந்திருக்கலாமோ என்று தோன்றுகின்றது. ராமாயணத்தைக் குசலவர்கள் கானம் செய்தார்கள் என்றால் இப்படித்தான் இருந்திருக்கலாம். ஜயதேவருடைய கீதகோவிந்தத்தில் சர்வோத்தமமான ஸாஹித்யம் அமைந்திருக்கிறது. சங்கீதமும் வெகு அழகு. அவருடைய மனைவி பத்மாவதிதேவியே சங்கீத ஸாஹித்யத்திற்குத் தக்கபடி நடனம் செய்து நாட்டியக் கலையின் மூலமாக ஆத்மாவை பரமாத்மாவிடத்தில் அர்ப்பணம் பண்ணினதாகத் தெரியவருகிறது. ஜயதேவர் தன்னை **पद्मावती चरण चारण चक्रवर्ती** என்று கூறுகின்றார். கீதகோவிந்தம் சங்கீத ஸாஹித்யங்கள் சம பிரதானமாக உள்ள காவ்யம். தியாகய்யருடைய ஒப்பற்ற மகிமை என்னவென்றால் அவர் தன் கிருதிகளைச் சங்கீதப் பிரதானமாகச் செய்ததுதான். ஸாஹித்யம் வெகு அழகு. பக்திரஸம் நிறைந்திருக்கின்றது. ஆனால் அவர் கண்டுபிடித்த புதுவழி என்னவென்றால் அழகான சங்கதிகளை ராகபாவம் ததும்பும்படித் தொகுத்து படிப்படி வின்யாசங்களாக ஏற்படுத்தி புதுப் புது ராகங்களைக் கண்டுபிடித்து புதுப் புது வர்ணமெட்டுகள் மனதில் கல்பனையாக உதயமாக உதயமாக அவைகளை ரஸமாக **பா**வதாளங்களுடன் பொருத்தி அமைத்து சர்வத்தையும் ஸ்ரீ ராமார்ப்பணமாகச் செய்த வழிதான்.

உண்மையில் சங்கீதம் என்பது ஒரு தனிக்கலை. சப்தமே மனிதனிடத்திலுள்ள தெய்வீக பிரகாசம். நாதம் பரம்பொருளின் முதல் தோற்றம். தண்டி

इदमन्धं जगत्सर्वं जायेत भुवनत्रयम् ।
यदि शब्दाह्वयं ज्योतिरासंसारान्न दीप्यते ॥

என்று கூறுகின்றார் சப்த ஸ்வரங்கள் ஆரோஹண அவரோஹணக் கிரமங்களால் அனேக ராகங்களாக ஏற்பட்டு அந்த ராகங்களை ஆலாபனம் மூலமாக சொல்லில்லாமலும் ஸ்வரம் பாடாமலும் கேட்டோமேயானால் ஆனந்தமயமாகி விடுகிறோம். இங்கேதான் பாடுகிறவர்களுடைய மனோ தர்மத்தையும் கல்பனை சக்தியையும் நன்கு உணரமுடியும். ஆனால் ராகஸஞ்சாரமானது அழகிய ஸாஹித்யம் மூலமாக இருந்தால் தத்துவ உணர்ச்சியாலும் பக்தி முதலிய ரஸங்களாலும் ஏற்படும் ஆனந்தமும் சேர்கின்றது. இந்த இரண்டு ஆனந்தங்களும் அழகிய முறையாகச் சேர்ந்தால் வெகு உத்தமமான ஆனந்தம். ராக ஆலாபனம் செவிக்குமட்டும் அமிர்தம் என்று எண்ணக்கூடாது. அது மனதிற்கும் அமிர்தந்தான். ஆனால் ராக**பா**வமும் ஸாஹித்ய **பா**வமும் நன்றாக இணைந்து சேர்ந்தால் தேவாமிர்தந்தான். அப்படி அவைகளைச் சேர்ப்பதில்தான் கலைத்திறமையை அறியமுடியும். இரண்டு ஆனந்தத்தையும் ஒன்றுபடச் சேர்க்க பக்தியும் வேணும். கலையின் நுண்ணறிவும் வேணும். ஆனால் அந்த ஸாஹித்யம் தாய் மொழியில் இருந்தால்தான் ஸாஹித்யத்தின் உண்மையை யாவராலும் நன்கறிய முடியும். அதுதான் மனதை உருக்கும். உயர்ந்த சக்தி வாய்ந்திருக்கும். எந்த ராகங்கள் எந்த ரஸத்திற்கு மிகவும் பொருத்தம் என்று கலைநிபுணர்கள்தான் அறியமுடியும். எந்தத் தாளமும் எந்த காலமும் எந்த **பா**வங்களைப் போஷிக்கும்? என்று அவர்கள் அநுபவத்தால் தான் நாம் அறியமுடியும்.

ஆகையால்தான் தாய் மொழியில் உள்ள சங்கீதத்திற்கு நாம் முக்கியமான ஸ்தானத்தைக் கச்சேரிகளில் அளிக்க வேணும். இதுபற்றித்தான் இப்பொழுது தமிழ்நாட்டில் இந்தப் பிரச்னை

கிளம்பி இருக்கிறது. இதை வாதத்தாலோ யுக்தியாலோ அடித்துப்பேசுவதாலோ அடக்கமுடியாது. சங்கீத திருமூர்த்திகளான தியாகய்யர், தீக்ஷிதர், சாமாசாஸ்திரிகள் மாதிரி தமிழ்ச்சங்கீத கலை நிபுணர்கள் தற்காலத்தில் ஏற்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் கச்சேரிகளில் தமிழ்பாட்டு ஏற்றமாக இருக்கவேண்டும் என்ற முயற்சியும் கிளர்ச்சியும்உண்டானால்,தானே நிபுணர்களும் உண்டாவார்கள். இப்பொழுதுங்கூட முத்துத்தாண்டவர், கவி குஞ்சர பாரதி, கோபாலகிருஷ்ண பாரதி, வேதநாயகம் பிள்ளை, பாபநாசம்சிவன், கோடீச்வரய்யர் முதலிய தமிழ் சங்கீத வித்வான்களுடைய கிருதிகள் அழகாக இருக்கின்றன. பழமையான தேவாரம், திருவாய்மொழி,திருப்புகழ் பாட்டுகளும் வெகு அழகாக இருக்கின்றன. ஆகையால் இப்பொழுது வந்திருக்கும் புதுக் கிளர்ச்சியில் மற்ற மொழிகளை அவமதிக்கவோ அடக்கவோ எண்ணமே கிடையாது. தமிழ்பாட்டுகளுக்கு அதிகமான அவகாசம் கொடுக்கவேணும் என்பது மட்டுந்தான் நோக்கம்.

ஆகையால்தான் மூன்றுமணிக் கச்சேரிகளில் ஒருமணி ஆலாபனத்திற்கும் ஒருமணி தமிழ்பாட்டுகளுக்கும் ஒருமணி ஸம்ஸ்கிருதம் தெலுங்கு முதலிய மொழிகளில் உள்ள பாட்டுகளுக்கும் தமிழ் நாட்டில் இடங்கொடுத்தால் வழக்குக்கு ஆதாரமே இருக்காது. கீர்த்தனங்கள் பாடுவதற்குமுன் சிறிய காலம் ஆலாபனம் செய்வதுடன் சில ராகங்களில் விஸ்தாரமான ஆலாபனமும் **பல்லவி, தானம்** பாடுவதும் வெகுகாலமாக ஏற்பட்டு வந்திருக்கிறது. ஆனால் வரவர ஸ்வரம் பாடுவது விரிந்து கொண்டும் ஆலாபனம் செய்வது குறைந்துகொண்டும் வருகின்றது. ஆலாபனத்தில்தான் ராக**பா**வத்தின் முழு உணர்ச்சியையும் மனோதர்மத்தையும், கல்பனா சக்தியை காட்டமுடியும்.

நம்முடைய பாரதநாட்டில் அரசியல் விஷயங்களிலும் சமூக விஷயங்களிலும் பொருளாதார விஷயங்களிலும் புத்துயிர் (Renaissance) இருப்பதுபோல் கலைகள் விஷயங்களிலும் புத்துயிர் மிளிர்கின்றது. இதுதான் கலை முன்னேற்றத்திற்குத் தக்க சமயம். இதை வீண் விவாதங்களில் பாழாக்காமல் கலை வாணியை வணங்கி பக்தியைப் பெருக்கிக் கலை முன்னேற்றத்தை நிலைநாட்டவேணும். கர்னாடக சங்கீதம் இணையற்ற அழகுள்ள கலை. அதைப் போற்றிப் பாராட்டவேணும்.

இளைஞர் கடமை.

சங்கீதத்தைப் பாதுகாக்க வேண்டியது இளைஞர்கள் கடமை. அதற்கு முக்கியமான சாதனம் நல்லொழுக்கம். மிகவும் நன்றாக இருந்த சாரீரம் ஒழுக்கக்கேட்டால் சீக்கிரத்தில் கெட்டுப் போனதைப் பலரிடம் நான் கண்டிருக்கிறேன். சங்கீதப்பயிற்சிக்கு ஆகார நியமம் அவசியமாகும். கண்ட கண்ட ஆகாரங்களை கண்டபொழுதெல்லாம் உட்கொள்ளுவது சாரீரத்தைக் கெடுத்து விடும்.

சிறு பிராயமுதற்கொண்டு சங்கீத அப்பியாசம் செய்தவர்களுள் மகாவைத்தியநாத அய்யர் ஒருவர். அவர் ஆகார நியமத்தில் தவறியதேயில்லை. இரண்டு முட்டைக் கரண்டிகளுக்குமேல் நெய்யைச் சேர்த்துக் கொள்ளார். பாலே சாப்பிடுவதில்லை. நீர்மோர் சாப்பிடுவார். இந்தக்காலத்தில் இது மிகவும் ஆச்சரியமாகவே தோற்றும். அப்படி அவர் இருந்ததனால்தான் அவருடைய சாரீரம் அவர் சொன்னபடி கேட்டுக்கொண்டிருந்தது.

டாக்டர். உ. வே. சாமிநதைய்யர்—நினைவு மஞ்சரி

பக்தி

கே. என். லலிதா சுப்பிரமணியம், தேவகோட்டை.

எப்பேர்பட்ட நாஸ்திகனும் தன்னுடைய கஷ்டகாலத்திலாவது கடவுளை நினைக்காமலிருப்பதில்லை. 'பகவானே, என்னை இப்படியும் ஆட்டிவைக்கிருயே.' என்ருவது சொல்லத்தான் தோன்றுகிறது. வெகுகாலத்திற்கு முன்பிலிருந்தே நம் நாடு பக்தி செய்வதில் பேயர் போனது. இந்த பக்தியால் முக்தியடைந்த மகான்கள் பலர். சில தாய்மார்கள் குழந்தைகளைக்கூட, "உம்மாச்சிக்கு நமஸ்காரம் பண்ணம்மா, உம்மாச்சியெ வேண்டிக்கோ" என்று பல தினுசாகச் சொல்லி அவர்களுக்கு தெய்வம் என்னும் நம்பிக்கையை ஏற்படுத்துவது வழக்கம்.

முன்னெல்லாம் நாங்கள் சின்னவர்களாய் இருக்கும்போது காலையும் மாலையும், கூடத்தில் மெழுகிக் கோலம்போட்டு புஷ்பம், குங்குமம், சந்தனம் எல்லாவற்றையும் சாத்திய குத்துவிளக்கை, கோலத்தின் நடுவில் ஏற்றிவைத்து அதற்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து பெரியவர்களையும் வணங்கிவிட்டுத் தான் மறுகாரியம் பார்ப்போம். விளக்கேற்றிவைத்த கூடம் ஒரு தெய்வீகத்தன்மையுடன் விளங்கும்.

இப்பொழுதும் சில வீடுகளில் இந்த வழக்கங்களையெல்லாம் விடாமல் சில பேர் செய்துதான் வருகிருர்கள். இந்தக் காரியங்களை அகௌரவம் என்று நினைப்பவர்களும் சிலர்.

தற்காலத்திய பெண்கள் இதையெல்லாம் கவனிப்பதே இல்லை. அப்படிக் கவனித்தாலும் அவர்களுக்கு இதெல்லாம் ஒரு பொம்மை விளையாட்டுப்போல் தோன்றுகிறது. உடுப்பது, உண்பது, உறங்குவது, இம்மூன்று யோசனைகளைத் தவிர மற்ற விஷயங்களுக்கு அவர்களிடம் சாவகாசம் கிடைப்பதில்லை. அவர்களிடம் வளரும் குழந்தைகளும் அவர்களைப்போலவே இருக்கின்றன.

இதை எழுதும்போது எனக்கு இன்னொரு விஷயமும் ஞாபகம் வருகிறது. என் மாமா ஒருத்தர் வெகு நாளாய் குடும்பத்தோடு கல்கத்தாவிலேயேயிருக்கிருர். இந்தப்பக்கம் ஏதாவது விசேஷங்கள் இருந்தால்தான் வருவார். என்மாமியின் தம்பிக்குக் கலியாணமென்று எல்லோரும் புறப்பட்டு வந்தார்கள். கலியாணங்களெல்லாம் முடிந்து ஊருக்குப் போவதற்கு முன் எங்கள் வீட்டில் பத்து நாள் இருந்து விட்டுப் போகச்சொல்லி எழுதி இருந்தேன். ஆகையினுல் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு மாமியுடன் வந்து பத்து நாள் இருந்தார்.

எங்கள் வீட்டில் என் மாமியார் பூஜை, மடி, ஆசாரம், விழுப்பு என்றெல்லாம் கொஞ்சம் பார்ப்பார். என் பெண் மீனுவும் அவள் பாட்டியிடம் இருந்து ச்லோகங்களை எல்லாம் கற்றுக்கொண்டு ஸ்வாமியிடம் சொல்லிக்கொண்டு உட்கார்ந்திருக்கும்.

நாகரீகமாய் குழந்தைகளை வளர்த்துத் தானும் நாகரீக ஆசாரங்களையே அநுசரிக்கும் என் மாமிக்கு இதை எல்லாம் பார்த்துக் கேலியாய் போய் விட்டது. ஒரு நாள் மீனு ஸ்வாமிபடத்தின்முன் உட்கார்ந்து பாட்டி சொல்லிக்கொடுத்த ஸ்தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தது. அதைப்பார்த்த என் மாமாவின் சின்னப்பெண், அவள் தாயிடம் சென்று "அம்மா! மீனுவைப் பாரேன்! படத்தண்டேபோய் ஸாமியோடு பேசுரு. எனக்கும் அந்தமாதிரி சொல்லிக்கொடேன்" என்றது. உடனே என் மாமி, "போடி! சாமியுமாச்சு, தம்பிரானுமாச்சு" என்று குழந்தையைக் கடிந்துக்கொண்டாள். உடனே என் மன

தில் சுருக்கென்றுதைத்தது! குழந்தையும் முகவாட்டத்துடன் போய்விட்டாள்.

மீனாவின் வாயைக்கிளற யாராவது "என் மீனா, தினமும் படத்தை ஸ்தோத்திரம் பண்ணுகிறாயே. சாமி உன்னோடு பேசறதா?" என்று கேழ்ப்பார்கள். அதற்கு மீனாவின் பதில் "தினமும் சாமியெவேண்டிண்டே இருந்தா ஒரு நாள் நிஜமாகவே சாமி என்னோடு பேசறத்துக்கு வருவார்னு அம்மாதான் சொன்னா" என்பாள். இந்தப் பதில் என் மனதுக்கு மிகவும் ஆறுதலாய் இருக்கும்.

குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே நம்பிக்கையூட்டவேண்டும். புராணக் கதைகள், நீதிக்கதைகள் எல்லாவற்றையும் சொல்லிக்கொடுக்க வேண்டும். கோவில் குளங்கள் முதலிய இடங்களுக்கு அழைத்துச் சென்று, அவர்களுக்கு அங்கே செதுக்கி இருக்கும் சித்திரங்கள், அவற்றின் கதைகள் முதலியவற்றை எடுத்துச் சொல்லவேண்டும். ஆண், பெண் குழந்தைகளும் இவைகளைக் கற்பது அவசியம். இப்படி எல்லாம் நாம் சொல்லிக் கொடுத்து அவர்களை நம்பிக்கை என்னும் ஒரு நிலைக்குக் கொண்டு வரவேண்டும். அவர்கள் எதிரில் நம் அலுப்புகளை எல்லாம் காட்டினால் அவர்களுக்கிருக்கும் நம்பிக்கை, பக்தி முதலியவை குறைந்து விடுமென்று என் அபிப்பிராயம். ப்ரதியொருஸ்திரீயும் இந்த விஷயங்களைஎல்லாம் கவனிக்க வேண்டியது அவசியம்!

பக்தியில் உண்மை, அன்பு, மரியாதை முதலியவைகளும் ஏற்படுகிறதென்பது சத்தியம்.

பொருள் என்ற உயிருக்குத் சொற்கள் என்ற தாதுக்களைக்கொண்டு தகுந்த ஒரு உடலை யாத்து, உயிரும் உடலும் கூடி, உணர்ச்சியும் அழகும் பொருந்திய உருவத்தோடு நிற்பது கவிதை. இத்தகைய சிருஷ்டியை—நன்னூலார் கூறுகிறபடி—'உணர்வினில் வல்லோரே' மக்களுக்கு ஆக்கித்தர முடியும். 'உணர்வு' என்றால் அறிவுமட்டுமல்ல: இதயத் துடிப்புகளும் கலந்த ஜீவ இயக்கம்.

கவிதை என்றால் என்ன என்பதை வெகு சிலரே உணர்வார்கள். தாம் உணர்ந்ததைப் பிறரும் உணருமாறு விளக்கும் ஆற்றல் படைத்தவர்கள் அதிலும் குறைந்தவர்கள். ஆற்றல்படைத்தவர்களாயினும் விடா முயற்சியுடன் சொந்த துக்கங்களையும் நோய்களையும் கவனியாமல் பணி செய்பவர்கள் மிகமிகச்சிலர். அவர்களில் ஒருவர் டி. கே. ஸி.; அவருடைய பணியும் புகழும் குறைவின்றி ஓங்கவேண்டும்.

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்—'கல்கி'

கடவுள் வழிபாட்டுக்குத் தூய்மை மிகவும் அவசியமென்பதை நம் நாட்டினர் நன்கு உணர்ந்திருந்தனர். தூய்மையாக இருத்தலினால் உடல் மருந்தில்லாமலே வன்மை பெறுமாதலின் அதற்கேற்ற சில வழக்கங்களைப் பெரியோர் அறிவுறுத்துகின்றனர். நன்னீரில் நீராடி நல்ல காற்று வீசும் பரந்த வெளியிடையே அமைந்த ஆலயங்களை வலம் வருவதனால் அவர்களுடைய உடல் வன்மை பெற்றது. நமஸ்காரம் செய்வதனால் உடம்பின் தசைகள் வலிவுறும். மலைகளின் மேலுள்ள கோயில்களுக்குச் சென்று தரிசித்து வருதலால் பல பிணிகள் நீங்கின. மலையின் மேல் ஏறினால் அங்குள்ள துய்மையான காற்று உடம்பிலே படும்போது உடம்பு ஆரோக்கியமுறுகின்றது.

டாக்டர். உ. வே. சாமிநாதய்யர்—"நினைவு மஞ்சரி"

நிறமாலைப் பகுப்பு முறை

டி. பி. நவநீதகிருஷ்ணன், எம். ஏ., அண்ணாமலைநகர்.

இருட்டறை யொன்றிலுள்ள சிறு பொந்தொன்றின் வழியே சூரியவெளிச்சம் வருகின்றது. எதிரிலுள்ள சுவரில் வெண்ணொளியாய் விழுகின்றது. வெளிச்சம் செல்லும் பாதையில் ஒரு முப்பட்டைக் கண்ணாடியை வைத்தால், வெண்ணொளிக்குப் பதிலாய் சுவரில் பலநிற ஒளி காணப்படுகின்றது. இது நாம் சாதாரணமாய்க் காண்பது. இதையே விஞ்ஞானச் சோதனை (அல்லது ஸயண்டிபிக் எக்ஸ்பரிமெண்ட்) யாய்ச் செய்யும் முறையைப்பற்றி விரிவாய்க் கூறலாம். முதலில், ஏதாவதொரு சிறு பொந்திற்குப் பதிலாய் திட்டமாய் வெட்டப்பட்ட சந்தின் வழியே ஒளி வருமாறு செய்யவேண்டும். அகலம் மிகக் குறைவாயும் உயரம் அதிகமாயும் எல்லாப்பக்கங்களும் நேரொழுங்காயும் (அல்லது ஸ்ட்ரெயிட்டாய்) அச் சந்து வெட்டி யெடுக்கப்படவேண்டும். இம் மாதிரியான சந்திற்குக் 'கீற்றுச்சந்து' (அல்லது ஸ்லிட்) என்று பெயர். சிறு கீற்றுச்சந்து (அல்லது ஸ்லிட்) வழியே ஒளி வருகின்றது. ஒளி வரும் வழியில் செங்குத்தான அடித்தண்டு (அல்லது வர்டிகல் ஸ்டாண்ட்) டன் உறுதியாய் இணைக்கப்பட்ட (அல்லது பிக்ஸ் ஆன) கண்ணாடி வில்லை (லென்ஸ்) வைக்கப்படுகின்றது. அந்த வில்லை (லென்ஸ்) யின் தளம் (ப்ளேன்) ஒளிவரும் திசைக்குக் குறுக்கே யிருக்கவேண்டும். அதாவது வில்லை (லென்ஸ்) யின் தளத்திற்கும் (ப்ளேன்) ஒளிவரும் திசைக்குமிடையில் ஒரு செங்கோண (ரைட் ஆங்கிள்) கோண இடைவெளி (ஆங்குலர் ஸ்பேஸ்) இருக்கவேண்டும். வில்லை (லென்ஸ்)க்குச் சிறிது தூரத்தில் ஒரு செங்குத்தான அடித்தண்டின் (வர்டிகல் ஸ்டாண்ட்) மீது சமதளப்பலகை(ப்ளாட்பார்ம்)வைக்கப்படவேண்டும். அதன்மீது முப்பட்டைக்கண்ணாடி (ப்ரிஸம்) வைக்கப்படவேண்டும். முப்பட்டைக் கண்ணாடி (ப்ரிஸம்) ஒரு குறித்தவிதமான நிலை (டிபனிட் பொஸிஷன்)யில் வைக்கப்படவேண்டும். இக்குறித்தநிலை 'தாழ்ந்த இழுக்கநிலை' (மினிமம் டீவியேஷன் பொஸிஷன்) என்பது. இது என்னவென்பதைச் சிறிது விளக்குவோம்.

ஒளிக்கதிர் (லைட்ரே) முப்பட்டைக் கண்ணாடியின் ஒரு பட்டை (ஸைட்)யில் விழுந்து, அதனின்று வெளியேறும் போது, அது வெளிச்செல்லும் திசை மாறுகின்றது. முதலில் வந்த திசைக்கும் வெளிச்செல்லும் திசைக்குமிடையுள்ள கோணவித்தியாசத்திற்கு (ஆங்குலர் டிபரென்ஸ்) இழுக்குக் கோணம் (ஆங்கிள் ஆப் டீவியேஷன்) என்று பெயர். ஒளிக்கதிர் முதற்பட்டையில் விழும் திசையை நிலையாய் வைத்துக்கொண்டு முப்பட்டைக் கண்ணாடியை மெதுவாய் சமதளத்தில் (ஹாரிஜாண்டல் ப்ளேன்) சாய்வுவாட்டமாய் உருட்டி (ரொடேட்)க் கொண்டேவந்தால் இழுக்குக்கோணம் (ஆங்கள் ஆப் டீவியேஷன்) வேறாய்க் கொண்டேவருகின்றது. மாறும் இழுக்குக் கோணத்தினளவு, ஓரளவைவிடக் குறைவதில்லை. மிகக் குறைந்த அளவேயுள்ள இழுக்குக் கோணத்திற்கு, 'தாழ்ந்த இழுக்குக்கோணம்' (ஆங்கிள் ஆப் மினிமம் டீவியேஷன்)என்று பெயர். இந்நிலையில் முப்பட்டைக் கண்ணாடி தாழ்ந்த இழுக்குநிலையில் உள்ளது. முப்பட்டைக் கண்ணாடியிலிருந்து வெளிப்படும் ஒளி பல நிறங்களுடனிருக்கும். அதன் பாதையில் மற்றொரு வில்லை (லென்ஸ்) முதல் வில்லை (லென்ஸ்) வைக்கப்பட்ட மாதிரியே வைக்கப்படும். அதற்குச் சற்று தூரத்தில் வெண்திரை (ஸ்க்ரீன்) வைக்கப்படும். அத்திரை (ஸ்க்ரீன்)யில் படும் ஒளி பல நிறங்களுடனிருக்கும். சிவப்பு, ஆரஞ்ச், மஞ்சள்,

பச்சை, நீலம், அவுரி நீலம், ஊதா (வைலட்) என்ற நிறங்கள் ஒழுங்காய் அதில் இருக்கும். அவை ஒரே அகலமான பட்டை (ஸ்ட்ரிப்)யில் அமைந்திருக்கும். விஞ்ஞானச் சோதனைமுறையைப் பின்பற்றாது, சாதாரணமாய்ச் செய்தபோது, கண்ட நிறங்கள் கலப்பாயும், வடிவின்றியும் இருக்கும். நிறங்கள் ஒழுங்காய் ஒன்றினொன்றாய் மறைந்துகொண்டிருக்காது. விஞ்ஞானச் சோதனை வாயிலாய்ப் பெற்ற ஒரேயகலமான நிறப்பட்டைக்கு, 'தூயநிறமாலை' (ப்யூர் ஸ்பெக்ட்ரம்) என்று பெயர்.

நாம் மேலே விவரித்த விஞ்ஞானச் சோதனை, ஆரம்ப விஞ்ஞானப்பகுதி (எலிமெண்டரி ஸயன்ஸ்) பாற்பட்டது. ஆனால் ஆரம்ப விஞ்ஞானத்திற்கும் உயர்தர விஞ்ஞானத்திற்கும் (ஹையர் ஸயன்ஸ்) நோக்கத்திலும், பயிற்சி முறையிலும் எவ்வித பேதமும் இல்லை. அவை கையாளும் ஆராய்ச்சிப் பொருள்களைப் பற்றியே வேற்றுமையுண்டு. விஞ்ஞானிய ஒழுங்குமுறை (ஸயண்டிபிக் மெதட்) எல்லோர்க்கும் பொதுவானதே. ஆதலின் விஞ்ஞானமுறைக்குச் சிறு உதாரணமாய் அச்சோதனையை முழுமையாய் விவரித்தோம். இனி கூறப்போகும் விஷயங்களில், அப்படி சவிஸ்தாரமாய் வர்ணிக்காமல், சோதனைகளின் முக்கியாம்சங்களையும் விளைவுகளையும் பற்றி மட்டுமே கூறுவோம்.

'தூயநிறமாலை' (ப்யூர் ஸ்பெக்ட்ரம்) யைப்பெறும் வழியைக் கூறினோம். அந்நிறமாலை திரையின்மீது விழுகின்றது. அதைப்பெற கீற்றுச்சந்து (ஸ்லிட்), வில்லைகள் (லென்ஸ்), சமதளப்பலகை (ப்ளாட் பார்ம்), முப்பட்டைக்கண்ணாடி (ப்ரிஸம்), எனும் பகுதிகள் தேவை. இவற்றையெல்லாம் சிறுவளவிலும், மிகத்திட்டமான நன்முறையிலும் செய்து தக்கவாறு ஒன்று கூட்டியமைப்பதால் (அஸெம்பிள்) ஒரு கருவியை (இன்ஸ்ட்ருமெண்ட்)ப் பெறலாம். அக்கருவியில் திரையை அகற்றிவிட்டு அதற்குப்பதிலாய் மற்றொரு வில்லை (லென்ஸ்) வைத்து, அதனூடே பார்த்தால் நிறமாலைக்காட்சி தென்படும். ஆனால் இந்நிறமாலைக்காட்சி திரையிலுள்ளதைப்போல் எல்லோருக்கும் பிரத்யக்ஷமாய் இருக்காது. கருவியில் கண் வைத்து நோக்கினவர்க்குமட்டுமே அது புலப்படும். கோணங்களை அளக்கும் வட்ட அளவுகோல் (ஆங்குலர் ஸ்கேல்) இன்னோரன்ன பல நுண்ணிய சாதனங்களும் அக்கருவியில்வைக்கப்படுகின்றன. அவ்வகையான நுட்பமான (ஸென் ஸிடிவ்) கருவிக்கு, நிறமாலையளவி (ஸ்பெக்ட்ராமீடர்) என்று பெயர். அதைக்கொண்டு நிறமாலையைக் காணவும் அதிலுள்ள நிறங்களின் நிலைப்பாடு (பொஸிஷன்)களை யளக்கவும்கூடும். அக்கருவி பூதவிஞ்ஞானத்தின (பிஸிக்ஸ்) உயர்ரகமான கருவிகளிலொன்று. அதைக்கொண்டு, பலவகையான நிறமாலைகளை ஊன்றிக்கண்டு நிறங்களின் தன்மைக்கான நிலைப்பாடுகளையும் அளக்கலாம். அவற்றினின்று ரசமான விஞ்ஞான விஷயங்கள் பலவற்றைத் தெரிந்து ஆனந்தப்படலாம்.

'பலவகையான நிறமாலைகள்' என்று மேலே சொன்னோம். பலவகைகள் எவை? யென்று கேட்கலாம். அக்கேள்விக்கு இனி பதில் சொல்வோம். சூரிய வெளிச்சத்தினின்று மட்டுமே நிறமாலை பெறலாம் என்று நினைக்கக்கூடாது. வெண்சுடர்த் தன்மை (இன்கேண்டிஸன்ஸ்)புள்ள எவ்வொளியினின்றும் நிறமாலை பெறலாம். பெட்ரோமாக்ஸ், மின்னொளிர் விளக்கு (எலெக்ட்ரிக் க்ளோலாம்ப்), மின்வளைவிளக்கு (எலெக்ட்ரிக் ஆர்க்லாம்ப்) இன்னோரன்ன விளக்குகள் தரும் ஒளிகளினின்றும் நிறமாலையைப்பெறலாம். இவற்றினின்று பெறும் நிறமாலைகளில், பல நிறங்களும் இடைவெளியின்றிப் பரவியிருக்கும். இவ்வகையானவற்றை 'தொடர்வண்ண நிறமாலை' (கண்டினுயஸ் ஸ்பெக்ட்ரம்) என்பர்.

வேறுவகையான நிறமாலைகளும் உள்ளன. அவற்றைப்பற்றி இனிக்கூறலாம். புன்சன் தீபம் (புன்சன் பர்னர்) என்

பத சோதனைமன்றங்களில் (லபாரேடரி) கூட்டடுப்பாய் மிகவும் உபயோகிக்கப் படுகின்றது. அதில் எரிவாயுக்கள் (கம்பஸ்டிபிள் காசெஸ்) கொழுந்துவிட்டெரிகின்றன. அதன் சுவாலை (ப்ளேம்)யில் பலவகைக் கரையங்களை (ஸொல்யூஷன்) எவ்வாறோ ஊட்டினால் சுவாலையின் நிறம் வேறுபடுகின்றது. நாம் சாதாரணமாய் உணவில் சேர்த்துக் கொள்ளும் ‘உப்பியல்பசியடு’ (சோடியம் க்ளோரைடு) என்றதனால் ஆன கரையம் சுவாலையிலுள்ளபோது, சுவாலை மஞ்சள் நிறத்துடன் எரிகின்றது. வேறு வஸ்துக்கள் சுவாலைக்கு வேறு நிறத்தைக் கொடுக்கின்றன. ‘வெடிப்பசியடு’ (பொடாஷியம் க்ளோரைடு) இளஞ்சிவப்பு (லாவண்டர்) வர்ணம் கொடுக்கின்றது. இன்னும் பலவும் இன்னும்பல நிறங்களுடனுள்ள சுவாலையைத் தருகின்றன. சாதாரண உப்புக்கரையத்தைக்கொண்ட சுவாலையை நிறமாலையளவி (ஸ்பெக்ட்ராமீடர்) கொண்டு நோக்கினால், அதனுள் வெண்சுடரொளிதந்தது போன்ற நிறமாலைகாணப்படாது, இருண்ட பின்னிடத்தினிடை (பாக்கரவுண்டில்) இருநெருங்கிய பிரகாசமான மஞ்சள் நிறமான வரிக்கோடுகள் காணப்படுகின்றன. வெடிய(பொடாசிய)உப்புக்கயைத்துடனுள்ள சுவாலை, இருண்ட பின்னிடத்தில், சிவப்பு வரியொன்றும், ஊதா வரியொன்றுமுள்ள நிறமாலையைத் தருகின்றது. இவ்வகையான நிறமாலைகளுக்கு ‘வரிநிறமாலை’ (லயன்ஸ்பெக்டரம்)கள் என்று பெயர். வரிநிறமாலைகளை (லயன்ஸ்பெக்ட்ரா) மற்றோர்வழியாயும் பெறலாம். காற்றகற்றப்பட்ட (இவேகுவேட்) கண்ணாடிக் குழாயில் இருநுனிகளில் உலோக மின்வாய்கள் (எலெக்ட்ரோட்ஸ்) வைத்து அதில் மின்சார விட்டம் (எலெக்ட்ரிக் டிஸ்சார்ஜ்) பாயும்படி செய்தால், குழாயில் ஒருவகையான ஒளி காணப்படுகின்றது. இம்மாதிரியான குழாய்க்கு வெட்டைக் குழாய் (வேகும் ட்யூப்) என்று பெயர். அக்குழாய்க்குள் எப்பொரிளிலாவது சிறிதை ஆவியாக்கி (வேபரைஸ்) அடைத்துவிட்டு, மின்சார விட்டம் (டிஸ்சார்ஜ்) பாயும்படிச் செய்தால், அதிலேற்படும் ஒளி குழாயிலுள்ள பொருளுக்கேற்றவாறு மாறுபடுகின்றது. ஆதலின், வெட்டைக் குழாய்களில் வெவ்வேறியலான ஆவிகளை அடைத்துவைத்து மின்சாரம் செலுத்தி, தோன்றும் ஒளியை நிறமாலையளவி (ஸ்பெக்டராமீடர்)கொண்டு நோக்கினால், அவ்வாவிப் பொருள்களுக்குண்டான வரிநிறமாலை (லயன்ஸ்பெக்டரம்) களைக்காணலாம். சுவாலை (ப்ளேம்) முறை பின்பற்றி சில பொருள்களின் நிறமாலையைமட்டுமே பெறமுடிகின்றது. வெட்டைக்குழாய் (வேகும் ட்யூப்)முறையால் எல்லாப்பொருள்களின் நிறமாலைகளையும் பெறலாம்.

இனி, நிறமாலையளவி ரசாயன விஞ்ஞான முன்னேற்றத்திற்கு எப்படி உதவியது என்பதைப்பற்றிக் கூறலாம். ரசாயன விஞ்ஞானிகள் எல்லாப் பொருள்களும் தொண்ணூற்றிரண்டு அடிப்பொருள்கள் (எலிமெண்ட்ஸ்)களாலானவை யெனக்கண்டுபிடித்திருக்கிறார்கள். கூட்டுப்பொருள்கள் (காம்பவுண்ஸ்) எவ்வெவ்வடிப் பொருள்களின் ரசாயனவியல் சேர்க்கை (கெமிகல் காம்பினேஷன்)யால் உண்டானவை எனக் கண்டுபிடித்துவிடலாம்என அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால், அவர்கள் எந்தப் பொருளிலுமுள்ள அடிப் பொருள்களை ரசாயன முறைகளால் கண்டுபிடிக்கிறார்கள் இப்படி அவர்கள் பொருள்களின் ரசாயனவியல் அமைப்பை (கெமிகல் கான்ஸ்டிடியேஷன்) தெரிந்துகொள்கின்றனர். இதற்கான பகுப்புமுறை (அனலிஸிஸ்)க்கு ரசாயனவியல்பகுப்புமுறை (கெமிகல் அனலிஸிஸ்) என்று பெயர். பொருள்களிலுள்ள அடிப்பொருள்கள் எவை யென்பதை அறிதற்கு நிறமாலை உதவுகின்றது. எப்படி யென்று இனிக்கூறலாம். நிறமாலையளவி [ஸ்பெக்ராமீட்ர்] கொண்டு ‘சுவாலை’ [ப்ளேம்] அல்லது மின்சாரம் பாய்ந்துகொண்டுள்ள வெட்டைக் குழாய் [வேகும் ட்யூப்] ஒன்றைப்பார்த்தால் காணப்படும் வரிநிறமாலை, சுவாலையல்லது வெட்டைக் குழாயிலுள்ள

பொருளுக்கேற்றவாறு இருக்கும் என முன்பே சொன்னோம். ரசாயன அடிப் பொருள் [எலிமெண்ட்] ஒவ்வொன்றி னுக்கும் அதற்கென்று பிரத்தியேகமா யுள்ள வரிநிறமாலை (லயன்ஸ்பெக்ட்ரம்) உண்டு. உப்பியம் [சோடியம்] இரு மஞ்சள் வரிகளையும், வெடியம் [பொடா சியம்] ஒரு சிகப்புவரி, ஒரு ஊதாவரியும் கொண்டனவான நிறமாலைகளைத்தரும் என முன்பே கண்டோம். இவ்வாறே மற்றபொருள்களுக்கும் தனித்தனியே ஏற்பட்டுள்ள நிறமாலைகளைப்பெறலாம். வெட்டைக்குழாயில் (வேகும் ட்யூப்) அடிப்பொருள்களை (எலிமெண்ட்ஸ்) ஒவ் வொன்றாய்வைத்து, நிறமாலைகளைக்காண லாம். கண்டவற்றை, அளவுக்கேற்ற தான படங்களில் (மாப்) அளவுவிதம் (ஸ்கேல்) மாறாது காட்டலாம். இப்படங் களுக்கு நிறமாலைப்படங்கள் (ஸ்பெக் ட்ரம் மாப்ஸ்) என்று பெயர். இவற்றின் துணைகொண்டு எப்பொருளினும் உள்ள அடிப்பொருள்கள் (எலிமெண்ட்ஸ்) எவை யென்பதை சுலபமாய்க்கண்டு பிடிக்கும் முறை ஏற்பட்டுள்ளதைக் காணலாம். அதாவது, ரசாயன அமைப்பு (கெமிகல் கான்ஸிடியேஷன்) அறியப் படவேண்டிய பொருளை ஆவிநிலையில் வெட்டைக்குழாயில் (வேகும் ட்யூப்) அடைத்து, அதனுள் மின்சாரம் பாய்ச்சி அக்குழாயினுள் தோன்றும் ஒளியை நிறமாலையளவி (ஸ்பெக்டாமீடர்) கொண்டு பரிசீலனைசெய்து, கிடைக்கப் படும் நிறமாலையை யளந்து படமாய் வரைந்துகொள்ளவேண்டும் அப்படத் தையும், பல அடிப்பொருள்களின் (எலி மெண்ட்ஸ்) நிறமாலைப் படங்களையும் (ஸ்பெக்டரம் மாப்ஸ்) ஒப்பிட்டுப்பார்த் தால், அமைப்பு (கான்ஸ்டிடூஷன்) அறியப்படவேண்டிய பொருள் எவ்வவ் வடிப்பொருள்களைக் (எலிமெண்ட்ஸ்)க் கொண்டுள்ளது என்று கண்டுபிடித்து விடலாம். இப்பகுப்பு முறைக்கு நிற மாலையியல் பகுப்புமுறை (ஸ்பெக்ட்ரம் அனலிஸிஸ்) என்று பெயர். பரிசீலனை (எக்ஸாமின்) செய்யப்படவேண்டிய பொருள் மிகமிகக் கொஞ்சமாயிருப்பி னும், நிறமாலைப் பகுப்புமுறை (ஸ்பெக் ட்ரம் அனலிஸிஸ்) பயன்படும். கோடி யில் ஒருபங்கு அவுன்ஸ் நிறையிருந்தா லும், நிறமாலையளவி (ஸ்பெக்ட்ராமீட்டர்) அதைக்கண்டுபிடித்துவிடும் என பௌ திகநூல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆதலின் நிறமாலைப் பகுப்புமுறை (ஸ்பெக்ட்ரம் அனலிஸிஸ்), ரசாயனப் பகுப்புமுறை (கெமிகல் அனலிஸிஸ்)யை விடப்பன்மடங்கு நுட்பமானது.

லிங்க்யூர்

க்ஷயம்
இருமல்
ஈளை
முதலியவை தீரும்.

விலை ஒருமாத மருந்து ரூ. 5
வி. பி. ரூ. 5—9—0

கிடைக்குமிடங்கள்:—

தி இண்டியன் இண்டஸ்ட்ரியல் கம்பெனி லிமிடெட்,
363, எஸ்பிளனேட், சென்னை.

தி யுனைடட் எல். ஐ. எம்ஸ். டிஸ்பென்சரிகள்.

1. 28, ஹஸ்மான் ரோட், தியாகராயநகர், சென்னை.
2. தெற்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை.
3. பட்டமங்கலத்தெரு, மாயவரம்.
4. தெற்குவீதி, தஞ்சாவூர்.
5. ஆண்டார்வீதி, தெப்பக்குளம், திருச்சி.

கூகைக்குக் காகை மேல்

ரா. சந்திரசூடன்

இக்கரைக்கு அக்கரை எப்பொழுதும் பச்சை என்ற உண்மைக்குத்தக்க இப்பொழுது டெல்லியில் (ஹிந்துஸ்தானியில் உச்சரிப்பு தெஹ்லி) அக்கரையான குளிர்காலத்தைப்பற்றித்தான் நினைந்து நினைந்து எல்லாரும் உருகி வருகிறார். ஏனெனில் கடும் வெயில் இப்பொழுதே நன்றாகப் பொசுக்க ஆரம்பித்துவிட்டது. சாதாரணமாக இம்மாதத்தில் காலையிலும் மாலையிலும் 'சிலுசிலு' என்று குளிரும்; மத்தியானத்தில் வெயில் உடம்புக்கு இதமாகவும், கதகதப்பாகவும் இருக்கும். குளிர்நாட்களிலிருந்து வெயில் பிராந்தியத்திற்குச் செல்லும் வாயில் இக்காலம். சிலர் "அப்பா, அப்பா இன்று என்ன வெயில் ஸார். குளிரெல்லாம் பறந்து போயிட்டுதே," என்று பரிமாறிக்கொள்வார்கள், மாலை ஆபீஸைவிட்டு வீட்டுக்குத் திரும்பி வரும்பொழுது. "அது என்னவோ நம்மால் இன்னும் ஸ்வெட்டரைக் (கம்பளி பனியன்) கழட்டமுடியவில்லை," என்பார் சிலர். யார் யார் வெந்நீரிலிருந்து தண்ணீருக்குத் தாண்டியிருக்கிறார்கள் என்ற கணக்கு ஊக்கமாக எடுக்கப்படும். ஐந்துமாத காலமாக விடாமல் தினந்தோறும் அணிந்துவந்த "கரம்" துணிகளை நீக்கிச் சிலர் பருத்தியாடை அணிய ஆரம்பிப்பார். தெருவோடு அவர்கள் ஆபீஸுக்கு போகும்பொழுது மற்றவர்கள் ஏதோ அதிசயமாகக் கங்காருவைக் காண்பது போல அவர்களைத் திரும்பித் திரும்பிப் பார்ப்பார்கள். "ஏண்டா, உங்காத்திலே இன்னும் ரொட்டிக்கடை நடக்கிறதா?" என்று கேட்டுக்கொள்வது உண்டு. [மிகுந்த குளிரில் அரிசிச் சாதத்தின் புஷ்டி போதாது என்ற ஐதிகப்]. ஹோட்டலில் மத்தியானத்தில் சிலர் ஐஸ் போட்டு நீர் கேட்பர்; சிலர் "கரம் பாணி"யும் கேட்பார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கையில் டிபன் மூட்டையைக் கட்டிக்கொண்டு ஸைகிளில் பக்கத்து ஊர்களுக்குப் "பிக்னிக்" புரோக்ராம் போடுவார்கள். மாசிமாதத்தில் இரவு 9-மணிக்குத் தெருவில் நடமாட்டமிராது. அப்படி யாராவது போனால் அது ஸோல்ஜராகவோ, லோந்து எடுக்கும் போலீஸ்காரனாகவோதான் இருக்கும். இருட்டி ஒரு ஜாமத்திற்குள் எல்லோரும் கூண்டிலடங்கி விடுவர். வீட்டுக் கூரையின் அருகில் உள்ள கண்ணாடி "வெண்டிலேடர்" மின்மினுப்பு ஒவ்வொன்றாக இதற்குள் அடங்கி யிருக்கும். சிலர் இம்மாதம் சயனத்திற்கு ரூமிலிருந்து வெளிவராண்டாவிற்கு முன்னேறுவர். குளிர் அம்மாதிரி விட்டதும் விடாததுமாக இதமாக இருக்கவேண்டிய நாட்கள் இவை.

ஆனால் இவ்வருஷம் புதுக்கால அளவு ஒருமணி முந்தி யிருப்பதுபோல, வெயிலும் ஒருமாதம் முன்னுக்கு வந்திருக்கிறது. வெகு சிலரே இன்னும் கம்பளி நிஜாரும், கோட்டும், பனியனும் போட்டு வருகின்றனர். இதற்குக்கூட அவர்களிடம் பருத்தியாடை கைவசம் இராததுதான் காரணம் என்று சொல்வதிலும் உண்மை இருக்கும் என்று தோன்றுகிறது. மேலும் வெயில்நாட்களுக்குச் சிம்ளாபோய்க் குளிர்நாட்களுக்கு இங்கு திரும்பிவரும் புண்ணிய ஆத்மாக்களுக்குப் பருத்தியாடை அவசியம் இதுவரை இருந்ததில்லை. போன வருஷத்திலிருந்துதான் சிம்ளாவுக்குச் சட்டி தூக்குவது நின்றுபோய்விட்டது.

குளிர்நீராட்டல் இப்பொழுது சாதாரணமாகிவிட்டது. பப்பாய் என்று சொல்லப்படும் இந்த ஊர் வெந்நீர்ப் பானை நன்றாக அலம்பி ஒவ்வொரு வீட்டிலும் வெந்நீர் அறையின் மச்சில் கொலு வைக்கப்பட்டிருக்கிறது. பூட்ஸ் துணியில் சுருட்டப்பட்டு உக்கிராண அறையின் மூலைக்குப் போய்விட்டன. "பத்தான்" செருப்பும், நமது அநாகரிக

ஜோடும் அதன் ஸ்தானத்தை எற்றிருக்கின்றன. ஆபீஸில் எலெக்டிரிக் கணப்பு நின்று, மின்சார விசிறி ஓடிவருகிறது. மூலைக்கு மூலை தொந்தியைச் சரித்து உட்கார்ந்து கொண்டிருக்கும் மிட்டாய் வாலாக்கள் "லஸ்ஸி" என்ற கடைந்து சர்க்கரையிட்ட தயிர்ப்பானம் விற்கத் துவங்கிவிட்டனர். முன்னாட்களில் இது கிளாஸ் ஒன்று இரண்டணா. இவ்வருஷம் 3 அணாவாக இருந்தால் அதற்காக அவனிடம் சண்டைபோடமுடியவில்லை. யுத்தம், யுத்தம் என்று கண்ணை மூடிக்கொண்டு விலைகள் ஏறியிருக்கின்றன. வாளியிலிருந்துவைடூரியம்வரை பொருள் விலை அதிகமாயிருக்கிறது. உயிர்த்தண்ணீரான காப்பியும் இம்மாதம் முதல் தேதியிலிருந்து கப் மூன்றணா. பொசுக்கும் வெயிலிலும் இது இருவேளையாவது சாப்பிட்டுத்தானாகவேண்டும். இல்லாவிட்டால் வாழ்க்கையிலேயே வெறுப்புத்தட்டிவிடுகிறது.

"ஆந்தி" என்ற புயலரக்கன் தற்பொழுது இக் கோட்டையைத் தகர்த்து வருகிறான். தூர வானத்தில் கருப்பாக மேகம்போல் முன்னால் கண்ணிற்குப் புலப்படும். அரைமணிநேரத்தில் உள்ளங்கை அளவு இருந்தது ஆகாய மண்டலத்தில் பாதியை மூடிப் படர்ந்துவிடும். மரங்கள் எல்லாம் தலைவிரித்துப் பேய்போல ஆடும். சூரியன் இருக்குமிடம் தெரியாமல் மறைந்துவிடும். நீலவானம் கப்பிப் புழுதிக்கலர் கொள்ளும். இன்னும் ஒரு 10 நிமிஷங்களுக்குள் 20 அடிக்கு முன்னால் என்ன இருக்கிறதென்று தெரியாமல் புழுதி கவிழ்ந்துகொள்ளும். வண்டிகள் அங்கங்கு நின்றுவிடும். ஸைகிளில் செல்வோர் மரியாதையாக இறங்கி ஒதுங்குமிடம் பார்ப்பர். நடந்து செல்பவர்களும் லாகவமாகப் பதுங்க இடம் தேடிச்செல்வர். வீட்டின் கதவுகளும் ஜன்னல்களும் படபடவென்று அடித்துக்கொள்ளும். இந்த "ஆந்தி" எங்களது அடுத்தவீட்டுக்காரரான தார்ப்பாலைவனத்திலிருந்து வரும் 'சீர்'. இந்த செம்மண் நமது மூக்கு, கண் எங்குபார்த்தாலும் வந்து புகுந்துகொள்ளும். சுவாசம் ஒற்றை நாசித்துவாரத்தால் மூச்சுவிடுவதுபோல சிரமமாகிவிடும். இப்புயல் இன்னும் மூன்றுமாதங்கள்வரை அடிக்கடிவரும். இது ஒருதரம் வந்து ஒருமணியோ இரண்டுமணியோ அடித்துச் சென்றால், உடனே தூற்றல் வராவிடில் அடுத்த ஒருவாரம் ஆகாயத்தில் நுண்ணிய புழுதி பனிபோல் நின்றுகொண்டே யிருக்கும்.

இந்த ஆந்தியாவது சகிக்கலாம். வெயில் கடுமையாக ஆகும் சமயம் "லூ" என்ற வெப்பக்காற்று புயல்வேகத்தில் அடிக்கும் இரண்டு மூன்று நாட்களுக்குச் சேர்ந்தார்போல். இரவு முழுவதும் கூடச் சிலசமயம் அடிக்கும். வெப்பத்தின் உச்சியை அப்பொழுது தான் நாங்கள் எட்டிப்பார்ப்போம். அந்த இரவுகளெல்லாம் சிவராத்திரிகள்தான்.

உக்கிர வெயிற்காலம் வந்தால் இன்னும் சில வேடிக்கைகள் நடக்கும். ஸைகிள் போய்க்கொண்டே யிருக்கும்பொழுது டயர் 'படார்' என்று வெடிக்கும். இதற்காகவே ரிப்பேர் கடைகளும் சாலை ஓரங்களில் பல இடங்களில் உண்டு. டாங்கா (குதிரை வண்டி) சென்றுகொண்டே யிருக்கையில் குதிரை கீழேவிழுந்து சில நிமிஷங்கள் துடித்து இறந்துவிடும். மனிதர்களுக்கும் இக்கதி நேருவதுண்டு.

மணமில்லாவிடினும் பளபளவென்று பல நிறங்களில் விதம் விதமான பூக்கள் எங்குபார்த்தாலும் கண்ணைப்பறித்து நின்றன இப்பொழுது மறைந்துவிட்டன. பட்டுப்போன அந்தப் பூச்செடிகளெல்லாம் களைந்து எறியப்பட்டுப் பார்க்குகள் எல்லாம் பொட்டைத்திடல்களாக மாறி யிருக்கின்றன. பச்சைப் பசேலெனத் தெருவின் இருபுறங்களிலும் அடர்ந்து வளர்ந்து நின்ற மரங்கள் இலைகளை யெல்லாம் உதிர்த்துக் குச்சி குச்சியான கிளைகளும், கொம்புகளுமாக நிற்கின்றன. சலசலவென்று அலைவருவதுபோல காய்ந்த இலைச்சருகுகள் தெருவில் காற்றின் வேகத்தில்

இங்கேயும் அங்கேயும் இப்பொழுது ஓடி விளையாடிக்கொண்டிருக்கின்றன.

இந்நாட்களில் விலை அதிகமாக இருந்தாலும் கத்தரிக்காய், வெண்டைக்காய், அவரைக்காய், கொம்பு பாவக்காய், கொத்தவரங்காய், பூஷணிக்காய் முதலிய கரிகாய்கள் கிடைத்து வருகின்றன உஷ்ணம் இன்னும் அதிகரிக்கும் பொழுது இவைகளெல்லாம் அந்தர்த்தியானமாகிவிடும். யானை விலையாகியிருக்கும் ஆலு (உருளைக்கிழங்கு) ருசியில்லாததும், காய்ந்ததுமான பெரிய வெங்காயம், இவை யிரண்டும் தான் சமையலுக்குக் கிடைக்கும் இன்னும் ஆறு மாதங்களுக்கு. மேல்நாட்டுக் கரிகாய்களென்று சொல்லப்படும் முட்டைகோஸ், சீமைத் தக்காளி, பூல்கோபி, பட்டாணி, பீட், காரட் கிழங்குகளும் வரவரக் குறைந்து வருகின்றன. சீக்கிரமே இவையும் மறைந்துவிடும்.

இவ்வளவு அருவருப்பான வெயிற் காலம் வரும்பொழுது ஒரு சந்தோஷ எண்ணமிருக்கும்: 'இந்த ரொட்டியைத் தொலைத்துத் தலைமுழுகலாமே இன்னும் ஆறுமாதகாலத்திற்கு' என்பதுதான். விதம் விதமாகப் புளியும், மிளகாயும் தாட்டி, குழம்பும், ரஸமும், கரியும் பக்குவமிட்டுச் சாப்பிட்டு வளர்ந்த நமது நாக்கு ரொட்டியையும் உப்புசப்பில்லாத பஞ்சாபிக் கூட்டையும் கண்டு முரண்டு கொண்டிருக்கும். அதனிடம் பச்சாதாபப்பட்டுத்தான் கோடைகாலம் வருவதாகத் தோன்றுகிறது. இவ்வருஷம் இந்த ஆசையிலும் மண் விழுந்துவிட்டது. அரிசி அகாத விலையாகிவிட்டது. மூட்டை விலை ரூ. 60, முன்விலை ரூ. 12. நாட்டில் பெரிய அரிசிப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அழகில் சிங்களத்திற்கும், அரேபியத் துருக்கிய நாடுகளுக்கும் ஏற்றுமதிவேறு நடந்து வருகிறது. நாட்டில் கோதுமை இல்லையென்றால் "உங்களில் வேளாளர்களும், வியாபாரிகளுமாகச் சேர்ந்து எல்லாக் கோதுமையையும் லோபியைப்போலக் கண்காணாமல் அடக்கம் செய்திருக்கிறீர்கள். நாங்கள் என்னசெய்ய முடியும்?" என்று லாகவமாகக் கவர்ன்மெண்டார் பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கே கோதுமை வேண்டுமே அதனால் பயமுறுத்திப் பார்த்தனர், அப்படி ஏதேனும் அந்தக் கோதுமை கடைக்கு வருமோ என்று. பலனில்லாததால் "எரிமீது கோபிப்பது" என்ற முறைப்படி ஆஸ்திரேலியாவிலிருந்து அத்தேசம் உபயோகிக்க லாயக்கற்ற தானியத்தை வாங்கி நம் தலையில் கட்டுகிறார்கள். இப்படியாவது நம் நாட்டில் உணவுப் பஞ்சம குறைந்தால் சரிதான்.

தென்னாட்டு அரிசிப் பஞ்சத்தைத் தாண்டிக்குதிக்க ஒரு யோசனையும் தோன்றுகிறது: கொஞ்சம் கொஞ்சமாகக் கோதுமையிலும் காப்பியில் கொண்டதைப்போல மோகம் கொள்ளலாமே என்பதுதான். நாட்டில் கோதுமை விளைவு குறைந்தாலும் நம் காருண்ய கவர்ன்மெண்டார் எங்கிருந்தாவது இந்தத் தானியத்தைக் கொண்டுவருவார் என்ற நம்பிக்கையிருக்கிறது. ஏனெனில் கழித்துக்கட்டுவதற்கு நேச வெள்ளை நாடுகள் பல கோதுமை வைத்திருக்கின்றன. ஆனால் எந்த நேச வெள்ளை நாடு நமக்கு அரிசி அனுப்பித்தர முடியும்?

இந்தப் பச்சையரிசிச் சாதமும் கிடைக்கவில்லையென்றால் இந்த வெயிற் காலம்தான் எதற்காக வந்ததென்று பெரும்பாலோர் மனதில் சந்தேகம் தோன்றுவது நியாயமே. உதடுவெடித்து முகம் 'வர வர' என்று இழுத்தாலும், கைகால்கள் அல்லித்தண்டுபோல் எப்பொழுதும் ஜில்லிட்டிருந்தாலும், தூங்கி எழுவதற்கு முன் ஆபீஸுக்கு நேரமாகிவிடும். சிரமமிருந்தாலும், இன்னும் குளிரினால் ஏற்படும் மற்ற அசௌகரியங்கள் இருந்தபோதிலும், இந்த ஆறு மாதங்களாகக்கூட வாழ்க்கை நடத்தி வந்த பேயே உத்தமம் என்று தோன்றுகிறது இவ்வெயிலுக்கு.

சந்திராஷ்டமம்

எல். ஆர். வி.

உலகத்தில் மனிதர்களுக்குக் கஷ்டங்கள் நேரும்போது அதைப் பலவிதமாகக் கூறுவதுண்டு. 'கஷ்டகாலம்' 'போதாத காலம்' 'அஷ்டமத்துச் சனி' 'ஏழரைநாட்டான்' என்றெல்லாம் சொல்வார்கள். இவைகளில் 'சந்திராஷ்டமம்' என்பதும் ஒன்று. இந்தச் சந்திராஷ்டமம் இருக்கிறதே, இது ரொம்பப் பொல்லாதது. சிலசமயம் அற்பசொற்பமான சங்கடங்களோடு ஆளை விட்டுவிடும். சிலசமயம் உயிருக்கே ஹானிவிளைவித்துவிடுவதும் உண்டு.

நமது ரகுராமனுக்கு அன்று சந்திராஷ்டமம் என்பது அவன் காலையில் படுக்கையைவிட்டு எழுந்த உடனேயே விளங்கிவிட்டது. தூங்கி யெழுந்ததும் கொல்லைப்பக்கம் போனான். நிலைப்படி 'லொட்' என்று தலையில் இடித்தது. 'அம்மாடீ' என்று தலையைத் தடவிக்கொண்டே கொல்லைப்பக்கம் போனவன் ஒரு முள்ளைத் தைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். அதைப்பிடுங்கிக் காயத்தில் சுண்ணாம்பை வைத்துத் திணித்துக்கொண்டு பல் தேய்க்கக் கிணற்றங்கரைக்குப்போய் கைதவறிக் கிணற்றில் சொம்பைப் போட்டான். சந்தைக்குப் போகவேண்டிய பரபரப்பில் நிதானம் தெரியாமல் காபியை ஒருவாய் குடித்துச் சூடு தாங்காமல் உளறியடித்துக்கொண்டு துப்பித் தாழ்வாரம் பூரா எச்சிலாக்கினான். "எதிலே போனாலும் ரகளைதானே!" என்ற தாயாரின் விதவிதமான ஆசிமொழிகளுடன் ஏழரை மணிக்குச் சைக்கிளில் ஏறிச் சந்தைக்குப் புறப்பட்டான்.

ரகுராமன் சந்தைத் தோப்பிற்குப் போய்ச் சேருவதற்குள் அவனது சைக்கிள் அப்பியாசத்தைப் பற்றி உங்களுக்குக் கூறிவிடுகிறேன். ரகுராமனுக்குத் தாங்கமுடியாத மனக்குறை ஒன்றிருந்தது. அது சைக்கிள் சவாரிதான். எல்லாரும் அனுயாசமாக ஏறி உட்கார்ந்து உல்லாசமாய் சவாரி செய்வதையும், நண்பர் இருவர் சேர்ந்தாற்போல் சைக்கிள்களில் அமர்ந்து தோள்மேல் கைபோட்டுச் சந்தோஷமாகப் பேசிக்கொண்டே செல்வதையும், நகர்புறங்களில் ஸ்திரீகள் சைக்கிளில் உலவுவதையும் காணக்காண அந்த ஆசை அவன் மனதில் வளர்ந்துகொண்டே வந்தது. "உலகத்தில் நம்மைப்போல் முட்டாள் யாருமில்லை. உலக்கைபோல் இருபத்தெட்டு வயதாகிறது. இன்னும் சைக்கிள் விடக் கற்றுக்கொள்ளவில்லையே!" என்று தன்னைத்தானே நொந்துகொள்வதுண்டு.

ஒருமாதத்திற்கு முன் ஒருநாள் அவன் என்னிடம் வந்து "எனக்கு சைக்கிள் விடக் கற்றுக்கொடு" என்றான். "வண்டி இல்லாமல் எப்படி முடியும்?" என்றேன் நான். "அந்தக்கவலை உனக்குவேண்டாம். என்னிடம் 'பஸ்ட்கிளாஸ்' வண்டியிருக்கு" என்றான். எனக்கு ரொம்பவும் ஆச்சர்யமாய் போய்விட்டது. ரகுவின் தாய் ரொம்பவும் கண்டிப்பானவள் பேர்வழி. குடும்ப வரவு செலவு அவள் வசம்தான். அனுவசியச் செலவுகளுக்கு அவள் இடம் கொடுக்கமாட்டாள். பிள்ளையாண்டானோ சம்பாத்தியமில்லாதவன். சைக்கிள் வாங்க வழி?

மறுதினம் சந்திரோதயம் ஆனதும் ரகு ஒரு சைக்கிள் சகிதம் என்னிடம் வந்தான். இருவரும் ஒரு மைதானத்திற்குப் போனோம். அவன் கொண்டு வந்திருந்ததுமிகவும் பழமையானவண்டி. "இந்த அபஸ்மாரத்தை எங்கேயடா தேடிப்பிடித்தாய்? ஆள் ஏறி உட்கார்ந்தால் பொல பொலவென்று நொறுங்கித்

தூளாகிவிடும் போலிருக்கே!" என்று நான் பரிகாசம் செய்ததையெல்லாம் அவன் லட்சியம் செய்யவில்லை. கருமமே கண்ணாயிருந்து ஒருவாரத்திற்குள் நன்கு அப்பியாசம் செய்துகொண்டுவிட்டான். வரவர குருவுக்கு மிஞ்சின சிஷனாகவும் ஆய்விட்டான். சைக்கிளில் ஏறினால் தலைகால் தெரிவதில்லை. அவன் ஆசை யடங்க வாயுவேக மனோவேகமாகத் தான் செல்கிறான். அந்தப் பழையவண்டிக்குச் சிறுகச் சிறுகப் பல சாமான்கள் வாங்கிப்போட்டு அதை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டான். ரகுவின் சைக்கிள்சவாரி அப்போது ஊரிலேயே புகழத்தக்கதாயிருந்தது. நிற்க.

சந்தையை நோக்கிக் கிளம்பின ரகு காலையிலிருந்து தனக்கு நேர்ந்துவரும் சில்லறை விபத்துக்களை மனதில் தியானித்துக்கொண்டே வழக்கத்துக்கு விரோதமாக சைக்கிளை மெதுவாக விட்டுக்கொண்டு ஆறுமைல் தூரத்திலுள்ள சந்தையை அடைந்தான். அவ்வளவு நிதானமாகப் போயும் ஒரு முரடன் மீது சைக்கிளை மோதிவிட்டான். அதுதான் சந்திராஷ்டமத்தின் வேலை! முரடன் வாயில்வந்தபடித் திட்டினான். நல்ல வேளையாக அடிக்கவில்லை. கீழே இறங்கி மெதுவாக சைக்கிளை உருட்டிக்கொண்டு இலைச்சருகு விற்கும் வியாபாரியை அடைந்தான். அவன் அன்று வாங்க வந்தது இலைதான். கட்டுகளை நன்றாகப் பிரித்துப்பார்த்துக் கிழிசல் இல்லாமல் பெரிய இலைகளாகப் பொறுக்கி மலிவாக நூறு சரகு வாங்கிவரும்படி அம்மா உத்திரவு. ஆகவே ரகு வியாபாரியின் எதிரில் குந்தினாற்போல் உட்கார்ந்து பேரம் செய்யத் தொடங்கினான்.

அப்போது ரகுவின் பின்புறம் சென்ற ஒரு மனிதன் கொஞ்சதூரம் போய்த் திரும்பிவந்து ரகுவின் பக்கத்தில் நிறுத்தியிருந்த சைக்கிளை ஏறஇறங்கப் பார்த்துவிட்டு ரகுவையும் ஒருமாதிரியாகப் பார்த்துச் சென்றான். இந்தச்செய்கை ரகுவை என்னவோ செய்தது. "முட்டாள்! வழியோடு போகிறவன் எதற்காகத் திரும்பிவந்து என்னையும் என் சைக்கிளையும் இப்படி உற்றுப்பார்த்துச் செல்கிறான்?" என்று மனதோடு வைது கொண்டான். அந்த மனிதன் கும்பலில் மறைந்தான். ரகுவும் வியாபாரத்தில் ஈடுபட்டான். சில நிமிஷங்களுக்குப் பின் ரகு தலைநிமிர்ந்தபோது சற்றுதூரத்தில் முன்வந்து சென்ற மனிதனும் ஒரு போலீஸ்காரனும் நின்றிருப்பதையும் ஏதோ ரகசியமாகப் பேசிக்கொள்வதையும் இடையிடையே தன்னை நோக்குவதையும் கண்டான். அவன் மனம் பெருத்த கலவரத்தை யடைந்தது. "சரி; இன்னிக்கு நமக்கு என்னமோ சைத்தான்தான் பிடிச்சிருக்கு. நல்ல வேளையிலே ஊர்போய்ச் சேரணும்" என்று மனதிலெண்ணிக்கொண்டு சரகு வியாபாரியிடம் அதிகத் தகராறின்றி சரகை வாங்கி சைக்கிளில் வைத்துக் கட்டிக்கொண்டு வேறு வழியாகப் போகும் நோக்கத்தோடு சைக்கிளை உருட்டிச் செல்ல ஆரம்பித்தான். அதைக்கண்ட போலீஸ்காரனும் மற்றவனும் பரிகாசமாக நகைத்தனர்.

ஒருவாறு கூட்டத்தைக்கடந்த ரகு வண்டியிலேறிக் குறுக்குச் சாலை வழியாகக் கடும்வேகத்தில் சைக்கிளை விட்டுக்கொண்டு சென்றான். கிராமத்திற்கும் சந்தைத் தோப்பிற்கும் நடுவில் வீரசோழன் கடைத்தெரு. அதன் வழியேதான் ரகு செல்லவேண்டும். சுமார் மூன்று மைல்களை க்ஷண நேரத்தில் கடந்தரகு கடைத்தெருவைச் சமீபிக்கவும் அதுவரையில் தன்னை யாரும் தொடர்ந்து வாராததால் "அப்பா! இனி பயமில்லை" என்று கடைத்தெருவில் சற்று மெதுவாகவந்தான். ஆனால் அந்த இருவர் நடுக்கடைவீதியில் நின்றிருந்தனர். ரகுவுக்கு 'பக்' என்றது.

"சாமீ! நிறுத்துங்க வண்டியை" என்று போலீஸ்காரன் சைக்கிளைப் பிடித்துக்கொண்டான். வெள்ளமாகப் பெருக்கெடுத்தோடும் வியர்வையைத் துடைத்துக்கொண்டே விக்கின குரலில் "ஏன்?" என்றான் ரகு.

"காரணம் இல்லாமலா? இந்தவண்டி எது? எப்போ எங்கே வாங்கினது?"

"இது ரொம்பநாளா என் கிட்டே இருக்கே"

"அதுசரி. எங்கே வாங்கினது?

"சிதம்பரத்திலே என் சொந்தக்காரர் வாங்கினது;நான் எடுத்துண்டுவந்தேன்"

"சரி. அதை ஸ்டேஷனில் வந்து சொல்லிவிட்டுப் போங்க"

மறுத்துப் பயனில்லை. ஸ்டேஷனுக்குப் போய்த்தான் தீரவேண்டும், என்பதை உணர்ந்த ரகு, ஊரிலிருந்து ஏதோ காரியமாகக் கடைத்தெருவுக்கு வந்திருந்த சோமு என்ற குடியானவனிடம் தான் போலீசாரிடம் விதிவசத்தால் மாட்டிக்கொண்டிருப்பதாகவும் உடனே போலீஸ்டேஷனுக்கு வரும்படியும் எனக்குச் சொல்லியனுப்பினான். ஊரில் நான்தான் அவனுக்கு ஆப்த நண்பன்; உறவினன்கூட.

குடியானவன் செய்தி கொண்டுவரும்போது பிற்பகல் மணி மூன்று. அதற்குள் சுமார் ஆயிரம் தடவை "சந்தைக்குப்போன பிள்ளையைக் கண்ணிலே காணுமே! என்ன நேர்ந்ததோ என்னமோவே!" என்று முணுமுணுத்துக்கொண்டேயிருந்த ரகுவின் தாயார் சோமு சொன்ன செய்தியைக் கேட்டதும் அலறி அடித்துக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள். ஊரார் எல்லாம் கூடிவிட்டனர். தலைக்குத்தலை வாயில் வந்தபடியெல்லாம் வம்பளக்க ஆரம்பித்தனர். எல்லோருக்கும் சமாதானம் கூறிவிட்டு வண்டியைப் பூட்டச் சொல்லி அதிலேறி நாலு மணிக்குள் ஸ்டேஷனை யடைந்தேன். சாத்தனூர் பண்ணை சாம்பசிவய்யர் என்றால் அந்தப் பக்கங்களில் நல்ல மதிப்பு. ஆகவே சாம்பசிவய்யர் பிள்ளை வந்து வில்வண்டியில் இறங்கி ஸ்டேஷனில் நுழைந்ததும் போலீஸ் சிப்பந்திகள் மிகவும் மரியாதையாக நடந்துகொண்டனர். சப்இன்ஸ்பெக்டர் சபாநாயகம் பிள்ளை என்னைக்கண்டதும் 32 பற்களையும் காட்டி ஒரு சலாம்செய்து உட்காரச் சொல்லிவிட்டு, கலர் வாங்கிவர உத்திரவிட்டார். பிறகு யோகக்ஷேமம்.

"ஆமாம் அந்த சாதுப்பையன் ரகுவைச் சார்ஜ் செய்திருக்கிறீர்களாமே! என்ன விஷயம்?" என்று வினவினேன். ரகுவும் ஒரு மூலையில் நின்றிருந்தான்.

"அதையேன் கேட்கிறீர்கள்! அவர் உங்களுக்கு வேண்டியவரா? பிள்ளையாண்டான் என்னமோ நல்லவர்தான்; செய்துவிட்ட காரியம்மட்டும் ரொம்பப் பெரிசுதான்........"

"அதுதான் என்னவென்று கேட்கிறேன்?"

"வீரசோழன் பேட்டைக் கடைத்தெருவில் ராமச்சந்திர நாயுடு சைக்கிள் கடை வைத்திருக்கிறாரல்லவா? அவர் ஒரு மாதத்துக்குமுன் தன் சைக்கிளில் ஒன்று திருட்டுப் போய்விட்டதாக ஸ்டேஷனில் பதிவுசெய்திருந்தார். இந்த ரகுராம அய்யர் அந்த சைக்கிளுடன் இன்று கடைத்தெருவில் பிடிபட்டிருக்கிறார். அவர் தனக்கு யாரோ சிதம்பரத்தில் இந்த வண்டியைக் கொடுத்ததாகச் சொல்கிறார். நாயுடுவோ இந்த வண்டி தன்னுடையதே என்று சாதிக்கிறார். சாட்சிகளும் இருக்கின்றன........"

இன்ஸ்பெக்டர் பேசிக்கொண்டிருக்கையில் நான் இரண்டொருமுறை ரகுவைக் கவனித்தேன். அவன் முகத்தில் அசடுதான் வழிந்தது. "பசியினாலும் களைப்பினாலும், ஏற்பட்ட கலவரத்தினாலும் அப்படி முகம் விகாரமாக இருக்க்வாயோ? உண்மையில் சைக்கிள் ரகுவுக்குச் சிதம்பரத்திலிருந்து கிடைத்திருக்கலாமோ" என்று எண்ணமிட்டேன். ஆனால் தற்பெருமையில் விரனை ரகு சிதம்பரத்திலிருந்து சைக்கிளை கொண்டுவந்திருக்கும் பட்சத்தில்

உடனே ஊரில் 'டாம் டாம்!' போட்டிருப்பான். அமுக்குப்போலிருந்து சைக்கிளை வெளிக்கிளப்பி யிருக்கிறுன். இதில் எதோ மர்மமிருக்கிறது" என்று நான் சிந்தித்துக்கொண்டிருக்கையில் சைக்கிள்கடை நாயுடுவும் அங்குவந்தார். என் எதிரேயே இன்ஸ்பெக்டர் மறுவிசாரணை செய்தார். தன்னிடமிருந்து ஒருமாதத்திற்குமுன் ஒரு ஆதித்திராவிடச்சிறுவன் அந்த சைக்கிளை வாடகைக்கு எடுத்துச் சென்றதாகவும் பிறகு அந்தச் சிறுவனேயோ தன்வண்டியையோ தான் அதுவரையில் பார்க்கவில்லை யென்றும் அது தன் வண்டிதானென்பதற்குப் போதிய சாட்சிகளிருப்பதாகவும் நாயுடு திடமாகக் கூறினுர். எனக்கொன்றும் புரியவில்லை.

ரகுவுடன் தனிமையில் பேசஅநுமதி பெற்று அவனை யழைத்துக்கேட்டேன். முதலில் என்னிடமும் 'சிதம்பர வரவு' கதையையே ஒப்பித்தான்.நான் உண்மையைச் சொல்லாவிடில் அவனைச் சந்தியில் விட்டுப்போய்விடுவதாகப் பயமுறுத்தினதும் உண்மை வெளிப்பட்டது. ஊருக்கருகாமையில் சாலையோரத்திலுள்ள குளத்திற்கு ஒருநாள் மாடுகுளிப்பாட்ட சென்றபோது மாடு நீச்சலடிக்கையில் நடுக்குளத்தில் அந்த சைக்கிள் கிடந்ததாகவும், இராத்திரிவேளையில் போய் ஒருவருக்கும் தெரியாமல் அதை யெடுத்து வந்ததாகவும் ரகு சொன்னுன். நான் இன்ஸ்பெக்டரிடம் அதை வெளியிட்டு ரகுவை மன்னிக்கும்படி மன்றுடினேன். அவரும் நல்லவர்தான். ஆனுல்........மாடு கறக்கக்கூடியதாயிருந்தால்......சந்தர்ப்பமும் வாய்த்திருக்கும்போது யார்தான் விட்டுவிடுவார்கள்? இன்ஸ்பெக்டரோ ஆதில் நிபுணர். கேஸ் சின்னதானுலும் விஷயம் மேலதிகாரிகளுக்கும் பக்கத்து ஸ்டேஷன்களுக்கும் அறிவிக்கப்பட்டுவிட்டதால் மறைப்பது கடினமென்று என்னவெல்லாமோ அளந்தார்.

ரைட்டரிடம் மத்தியஸ்தம் கோரினேன். இன்ஸ்பெக்டர் ஒரு நோட்டில் இருப்பதாகத் தெரிந்தது. உபயோகமற்ற சைக்கிளுக்கு ஒரு நூறு ரூபாயா? அப்படியும் சைக்கிளின் பாத்தியம் இனி நாயுடுவுக்கு. இந்த லட்சணத்தில் தான், 20 ரூபாய்க்கு அந்த வண்டிக்குச் சாமான் வாங்கிப்போட்டிருப்பதாக ரகு முனகினுன். முடிவில் 50 ரூபாயை ரைட்டர் கையில் திணித்துவிட்டு ரகுவை அழைத்துக்கொண்டு அஸ்தமனத்திற்கு ஊர் வந்து சேர்ந்தேன்.

உண்மையில் அன்று சந்திராஷ்டமம் ரகுவுக்கா;எனக்கா?ரகுவுக்குக் காலையில் சில சரீர கஷ்டமும் பகல்பூரா பட்டினியும். எனக்கோ 50 ரூபாய் தண்டம். இன்னமும்தான் அந்தரூபாயை எனக்கு திருப்பித்தரப்போகிறுன் ரகு. வருடக்கணக்கில் போய் எல்லோருக்கும் அந்த சம்பவம் மறந்துகூடவிட்டது. ஆகவே 50 ரூபாயைத் தண்டமிழந்த எனக்கேதான் அன்று பாழாய்ப்போன படுபாவி **சந்திராஷ்டமம்!**

கோடைகால ஆரோக்ய ஸ்தலங்கள்

]O[

தரங்கம்பாடி, திருக்கடையூர், திருவெண்காடு, (சுவேதாரண்யம்), காவேரிப்பூம்பட்டிணம்.

ஒர் முறை விஜயம் செய்து குளிர்ச்சியும், சாந்தமுமுள்ள கடல்க்காற்றை அனுபவித்து ஆனந்தியுங்கள்.

உஸ்தாத் மஜ்லிஸ் கான்

எஸ். குஞ்சிதபாதம், ஆனைதாண்டவபுரம்.

(சென்றமாதத் தொடர்ச்சி)

மனதின் மறைந்த பாகத்திலிருந்து மறதித் திரையை விலக்கிக்கொண்டு என் நினைவு வராமல் பதுங்கிக் கொண்டுகிடக்கிறது? ரொம்பப் பழக்கமானவன் அவன்! ஆனால் காலவெள்ளத்தில் அவன் எங்கேயோ, நான் எங்கேயோ அடித்துப்போகப்பட்டு மறுபடியும் ஒரு துறையில் வந்து மோதிச் சந்தித்தோம். நான் விழித்துக்கொண்டு இருந்தேன். அவன் என்னுடைய மறதியை ஊகித்தறிந்துகொண்டான். "ஞாபகம் வருகிறதா, மொகல்ஸராய் ஜங்ஷனிலிருந்து பனாரஸ் போகும்வழியில் ஒரு ரயில் விபத்து நேர்ந்ததே" என்று கேட்டான். இவ்வளவேபோதும், மின்சாரம் பரவ ஒரு பொத்தானையமுக்குவதுபோல என் ஞாபகத்தைத் தட்டியெழுப்ப. அவனை நான் வைத்தகண் வைத்தபடியே பார்த்துக்கொண்டேதான் இருந்தேன். இந்த எழெட்டு வருஷகாலத்தில் அவன் அதிக மாறுபாடு அடையவில்லை. ஆனால் எனக்குத்தான் ஞாபகக் குறைவு.

"உம்........உம்........ஆ.... உன் பெயர் என்ன?" என்று கேட்டேன் பரபரப்புடன்.

"மஜ்லிஸ்கான்" என்று அவன் கணீரெனப் பதில் சொன்னான்.

'மஜ்லிஸ்கான்! அந்தப் பெண்ணை இவள்?, என்று கேட்டேன்.

"ஆம்! அல்லாஹ்-த-ஆலா காப்பாற்றி விட்டார். இனிமேல் கவலையில்லை" என்றான்.

நானும் அவனும் சிறிதுநேரம் மௌனமாக இருந்தோம். கடவுளை தியானம் செய்தோம். நாம ரூப பேதம் பாராட்டாத ஸர்வாந்தர்யாமியின் கருணையைப் பாராட்டினோம். நண்பர்கள் ஒன்றும் விளங்காமல் எங்களைப் பார்த்தார்கள். கனகலதாவும் என்னை யுற்றுப்பார்த்தாள்.

டாக்டர் நண்பர் 'உங்களுக்கு இவர்களைத் தெரியுமா? ஏனிப்படி ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்கிறீர்கள்? என்ன விஷயம்?' என்று கேட்டார். நான் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு பேசாமலிருந்தேன். மற்ற நண்பர்களும் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டார்கள். எனக்கு ஒரு யோசனை தோன்றியது. நான் விவரங்களைச் சொல்லாவிட்டால் அவர்கள் விடப்போவதில்லை. சொல்லத்தான் சொல்கிறேன், அதை என்னத்திற்காகச் சட்டுப் புட்டென்று சுருக்கமாக மொட்டைத்தாதன் குட்டையில் விழுந்தான் என்ற தோரணையில் சொல்ல வேண்டும்? விஷயத்திற்குக் கொஞ்சம் கண், காது, மூக்கு வைத்துச் சிறப்பித்து ஒரு குட்டிப்பிரசங்கம் செய்தால் என்ன என்று தோன்றியது. அதுவும் இந்த விருந்து உபசாரத்தில் முன் குறிப்பிடப்படாதஒரு நிகழ்ச்சியாக இருக்கட்டுமே என்று எண்ணினேன். ஒரு கனைப்பு கனைத்துக்கொண்டு சாரீரத்தைச் சரிப்படுத்திக்கொண்டு ஆரம்பித்தேன்.

"சகோதரர்களே! சகோதரிக........ மன்னிக்கவேண்டும், இங்கு ஒரு சகோதரியும் இல்லையா, சரி, சகோதரர்களே! உட்காருங்கள்! மஜ்லிஸ்கான்! பைடியே இதர்! நான் சொல்லப்போகும் கதை, இல்லை சம்பவம் ரொம்பவும் சோககரமானது. உங்களுடைய கைக்குட்டையை உபயோகப்படுத்தாமல் அதைக் கேட்கமுடியாது. உங்கள் கண்ணி

லிருந்து ஒரு டிராம்-என்ன டாக்டர், அறுபது துளியா ஒரு டிராமுக்கு? சரி-கண்ணீராவது வரவேண்டும். அப்படி வராவிட்டால் குற்றம் சம்பவத்தின் மேலில்லை, நான் உருக்கமாகச் சொல்லாத தோரணையின்மேல் தான் இருக்கும்.

'ஏழு எட்டு வருஷங்களுக்கு மேலாகிறது; நான் காசிக்குப் போனேன். மொகல்ஸ்ராய் ஜங்ஷனில் ஒரு ரயிலில் இண்டர்கிளாஸ் வகுப்பில் ஏறி உட்கார்ந்து பெட்டி படுக்கைகள் ஜாக்கிரதையாக இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினேன். நான் தூக்கம் வருவதற்காகச் செய்யும் உபாயம் இது. நாலைந்து பக்கங்கள் புரட்டினுல் தானுகத் தூக்கம் நம்மைவந்து அடைவதற்குக் கடினமான விஷயத்தைப்பற்றிய புத்தகத்தைவிடச் சிறந்த சாதனம் வேறில்லை. அப்போது ராத்திரி மணி பதினென்று. என்னுடைய கம்பார்ட்மெண்டில் என்னைத்தவிர வேறொரு பிராணி-உம், பிரயாணியும் இல்லை லேசாக மழை தூறிக்கொண்டிருந்தது. நாவல்களில் எழுதுகிறதைப்போல, வானத்தில் மேகம் மெழுகிக்கொண்டிருந்தது. பக்கத்து வண்டிகளில் ஜனங்கள் பெரிய மூட்டைகளுடன் ஏறுவதும் இறங்குவதுமாக ஆரவாரம் செய்துகொண்டிருந்தார்கள். தேநீர் விற்பவர்கள் தூங்கி விழுந்தபடியே தள்ளாடிக் கொண்டு, 'கரம் சாய்' என்று கத்திக் கொண்டு அலைந்தனர். 'பீடி-ஸிகரட், பான்-தம்பாகு' 'கல்கதிபாகேலா, நாக்பூர் பெந்த்ரா' என்றெல்லாம் சத்தம் போட்டுக்கொண்டு இந்தப் பாதிராத்திரி வேளையில் அவர்களுடைய சாமான்களை வாங்குவதற்காக யாரோ ஆவலுடன் காத்திருப்பதாக எண்ணமிட்டுக்கொண்டே தட்டுக்காரர்கள் பிளாட்பாரத்தில் அங்குமிங்கும் உலவினர். அப்போது நன்கு உடையணிந்த ஒரு முசல்மானும், ஒரு சிறு பெண்ணும் நானிருந்த வண்டியில்வந்து ஏறினர்கள். அந்த இரண்டு பேர்களும் இவர்கள்தான் என்பதை நீங்கள் கண்டுபிடித்துவிடுவீர்கள், எனக்குத்தெரியும். ஆனுலும் கதையின் ஸ்வாரஸ்யம் போய்விடும் அல்லவா? அதற்காக அவர்களை வேறு மனிதர்களாக எண்ணிக்கொண்டால் தான் நன்ருகக் இருக்கும் கதை.

"என்ன ஸார், விஷயத்தைச் சட்டுப் புட்டென்று சொல்லுங்களேன். எந்த விஷயமாக இருந்தாலும் ஆதி அந்த மில்லாமல் வளர்த்திக்கொண்டே போகிறது உங்கள் ஸ்வபாவம்" என்ருர் என்னுடைய அவசரக் குடுக்கை நண்பர் ஒருவர்.

"விபரமாகச் சொல்லட்டும். நமக்கு இப்பொழுது என்ன அவசரம்? பொழுது போகட்டும். விஸ்தாரமாகச் சொல்லுங்கள் ஸார்" என்று என்னுடைய இலக்கிய ரஸிக நண்பர் ஒருவர் இயம்பினுர்.

"விஷயத்தை ரொப்ப வளர்த்தவும் கூடாது. சப்பென்று நாலு வார்த்தையிலும் முடிக்கக்கூடாது" என்று நிதானமாகச்சொன்னுர் என்னுடைய நடு நிலைமை நண்பர்ஒருவர். 'எல்லோருடைய அபிப்பிராயத்தையும் கேட்டுக்கொண்டு பிறகு பேசுங்கள்' என்று நானாக்காக ஒரு யோசனையை இடையே சொருகி வைத்தார் ராவ்பகதூர்.

"இப்பொழுது இந்த விஷயத்தைப் பற்றி ஒட்........" என்றேன் நான்.

"உங்கள்இஷ்டப்படிச் சொல்லுங்கள் சார். கேட்கிறவர்கள் கேட்கட்டும். கேட்காதவர்கள் எழுந்திருந்து போகட்டும். யார் இருந்தாலும் சரி, போனுலும் சரி கடைசிவரையில் நான் இருக்கிறேன். காலி நாற்காலிகளுக்கு நீங்கள் பிரசங்கம் செய்யவேண்டாம். என்னுடைய நோயாளிகளில் இப்பொழுதே செத்துப் போகக்கூடியவர் ஒருவரும் இல்லை" என்று டாக்டர் கடைசியாக இந்தச் சலசலப்பை அடக்கினர்.

நான் பேசலே தொடங்கினேன்.

"கதையை எங்கே விட்டேனென்று தெரியவில்லை....சரி, நானிருந்த வண்டியில் ஒரு முஸல்மானும், ஒரு சிறு பெண்ணும் வந்து ஏறினர்களா? ஏறினர்கள். அவனுடைய கையில் ஒரு வாத்தியம் இருந்தது. சாமான்களை எடுத்துவந்த கூலியிடம் பத்து நிமிஷம் தகராறு செய்து சில்லறையைக் கொடுத்தனுப்பிவிட்டு என்னெதிரே வந்து உட்கார்ந்தான் அவன். அந்தப் பெண்ணும் உட்கார்ந்துகொண்டாள். மணியடித்தது. கார்டு ஊதினன். கேளுங்கள் டாக்டர்! வண்டியின் பின்னல் பச்சை விளக்குத் தெரிந்தது. ரயில் ஷட்ஜமத்தில் ஊதிவிட்டுக் கொஞ்சம் பின்னல் நகர்ந்து, பிறகு முன்னல் புறப்பட்டது. குப்' குப், குப்! ரயில் வேகமாக ஓடத் தொடங்கியது."

டாக்டரைப் பார்த்து எல்லாரும் சிரித்தார்கள், டாக்டரும் சிரித்தார். அவர்களுடன் சேர்ந்து; நானும் சிரிக்காவிட்டால் அவர்கள் என்னைப் பரிகாசம் செய்வதைப் போலாகிவிடும் என்று நானும் சிரித்தேன்.

"நான் அந்த முஸல்மானிடம் பேச்சுக் கொடுத்தேன். தூக்கம் வருகிறவழியாகக் காணும். புத்தகத்திலும் மனம் நாட்டமில்லை. அப்படியிருக்கும்போது எதிரேயுள்ளவர்களிடம் பேச்சுக் கொடுப்பது சகஜம்தானே? "சங்கீத வித்வானு தாங்கள்?" என்று கேட்டேன் ஹிந்துஸ்தானியில். "ஆமாம்! நானும் ஒரு வித்வான்தான். எத்தனையோ டப்பா, க்யால் பாடுகிற வித்வான்கள் இருக்கிருர்களே அவர்களில் நானும் ஒருவன்தான்." என்று சொன்னுன் அவன். சரிதான் சுயப்ரக்ஞையுடன் இல்லை, அலுத்துக்கொண்டு சொல்கிரார். இனிமேல் பேச்சுக்கொடுக்கக்கூடாது. என்று நான் மறுபடியும் கண்களைப் புத்தகத்தில் செலுத்தினேன்.

"என்னமஹராஜ் போங்கள்! ஸங்கீதமே கெட்டுப்போய்விட்டது. நாடோடியான வித்வான்கள் பாடுவதுதான் ஜனங்களுக்குப்பிடிக்கிறதேதவிற பழைய பிராசீன பூர்வமாயுள்ள வழிகள் ஜனங்களுக்குத் திருப்தி யளிப்பதாக இல்லை. பெரிய பெரிய தோடாக்களும், சன்மானங்களும் வாங்கின இதே மஜ்லிஸ் கான் இப்போது கேட்பாரற்றுக் கிடக்கிறேன்" என்றுன் அவன். மஜ்லிஸ்கான் ருகோ, இந்தப் பெயர் கேள்விப்பட்ட பெயராக இருந்தது. நான் புத்தகத்தை மூடித் தலையணைக்கடியில் வைத்துவிட்டுப் பேச்சில் ஈடுபட்டேன். ஸங்கீதத்தைப் பற்றி வெகுநேரம் நாங்கள் பேசினேம். கர்நாடக ஸங்கீதம் சாஸ்திரசம்மதமானதா, அல்லது வடநாட்டு ஸங்கீதம் சாஸ்திரசம்மதமானதா? அராபிய, பாரஸீக இசைக்கலைகளால் வடநாட்டு ஸங்கீதம் பாதிக்கப்பட்டதா, இல்லையா? எத்தனையோ விஷயங்கள் இப்படி. ஆடி ஆடி விழுந்துகொண்டும் திடுக்கிட்டு விழித்துக் கொண்டுமிருந்த அச் சிறுமியை ஒரு பக்கம் படுக்கவைத்துவிட்டு நாங்கள் சர்ச்சை செய்துகொண்டிருந்தோம். என்னுடைய அல்ப ஞானத்தைக் கொண்டே என் அறியாமையைச்சாமர்த்தியமாக மறைத்துக்கொள்ள முயன்று கொண்டிருந்தேன். இந்த லக்ஷணத்தில் நான் பாட்டுவேறு பாட ஆரம்பித்து விட்டேன். பிறகு, மஜ்லிஸ்கானிடம் "இந்தக் குழந்தை யார்? பார்வைக்கு ஹிந்துப் பெண்போல இருக்கிறுளே?" என்று விசாரித்தேன்.

மஜ்லிஸ்கானை நான் பார்த்தேன். சொல்வதில் தனக்கு ஒன்றும் ஆக்ஷேபணை இல்லை என்று அநுமதிப்பவனைப் போலக் கண்ணிமைகளையசைத்தான்.

அவன் சொன்னுன்: "இதுவா, இந்தக் கதையை என் கேட்கிறீர்கள்? பாலிலாலா என்ற ஒரு பார்ஸி நாடகக் கம்பெனி இருந்ததே தெரியுமா? நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அந்தக் கம்பெனியில் நான் இருந்தேன். ஜனங்களுக்குக் கச்சேரிகளைவிட நாடகங்களிலேதான் மோகம் ஏற்பட்டிருந்தது. பணத்தாசை என்னை அந்தக் கம்பெனிக்கு இழுத்தது. ரொம்பகாலம் அதிலே

நான் வாரங்கி வாசித்துக்கொண்டிருந்தேன். அதிலே ஒரு நடிகை......"

"அவள் பெயர்?........"

"பாய்ஜத்தன் பாய் என்று அவளுகுப்பெயர். அவளுடைய பெயர் நாடக விளம்பரத்திலே இருந்துவிட்டால் அன்று டிக்கெட் வாங்குமிடத்தில் ஒரு போலீஸ் படையைக் கொண்டுவந்து நிறுத்தவேண்டுமாம். அவ்வளவு கியாதி அவளுக்கு"

"மஜ்லிஸ்கான் தன்னுடைய ஆயுளில் கல்யாணமே செய்துகொள்ளவில்லை. அந்த பாயுடன் நட்பு ஏற்பட்டது. அவளுடன் சில வருஷங்கள் நாடகத்தில் இருந்தான். பிறகு அந்தக் கம்பெனி தெய்வாதீனமாக கொடித்துப் போய்விட்டது. பாய் ஜத்தன்பாயும், மஜ்லிஸ்கானும் வெளிக்கிளம்பினர்கள். எங்கெங்கேயோ போனர்கள். அவளுடைய ஞாபகச்சின்னமாக இந்தக் குழந்தையை விட்டுவிட்டு அவள் செத்துப்போய்விட்டாள். மஜ்லிஸ்கான் இந்த விபரங்களையெல்லாம் என்னிடம் ரயிலில் சொன்னன். நாங்கள் இன்னும் என்னென்னவோ பேசிக்கொண்டிருந்தோம்.

"காரிருளைக் குடைந்து கொண்டு வண்டி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. திடீரென்று அண்டகடாகம் பெயர்ந்ததுபோல ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது. பூகம்பம் உண்டானதுபோல அதிர்ச்சி உண்டாயிற்று. ரயிலின் விளக்குகள் அணைந்துபோய் விட்டன. பிசாசோ, பூதமோ என்னை அதலபாதாளத்தில் தூக்கி எறிந்துவிட்டது போலிருந்தது. என் மண்டை கல்லோ, கட்டியோ, மரமோ, இரும்போ எதன்மீதோ பலமாக மோதுண்டது. என்மேல் என்னென்னமோ சாமான்கள் வந்து குவிந்துகொண்டிருந்தன. இதெல்லாம் சொல்வதற்கு நேரம் பிடிக்கிறது; ஆனல் ஒரு க்ஷணத்திற்குள்ளே எல்லாம் நடந்துவிட்டன. அடடா, என்ன ஆகுமோ, வீட்டிலே சொல்லிக்கொள்ளாமல் வந்துவிட்டோமே, இப்படியெல்லாம் ஆபத்து ஏற்படும் என்று தெரிந்தால் உயில், கியில் எழுதி வைத்துவிட்டு வந்திருக்கலாமே என்று நினைப்பதற்குக்கூட அப்போது நேரமில்லை. தலையில் அடி பலம். வலி ஜாஸ்தி. தொட்டுப்பார்த்தேன். ஈரமாகஇருந்தது. அயர்ந்துவிட்டேன். வானத்தில் நக்ஷத்திரங்கூட இல்லை. ரயில்பாதைக்குச் சற்று தூரத்திலிருந்த ஒரு மரத்தின்மீது ஏராளமான மின்மினிப் பூச்சிகள் அடைத்துகொண்டிருந்தது தான் தெரிந்தது. மின்மினிக்கூட்டத்தைக் கொண்டுதான் அது ஒரு மரமாக இருக்கவேண்டுமென்று நான் அநுமானித்தேன் என்று தர்க்க பண்டிதர் நான் சொல்வதைத் திருத்தலாம். குழந்தைகள் வீறிட்டலறும் சப்தம், மனிதர்களின் கூக்குரல்கள், 'ஹோ' என்று தண்ணீர் ஓடும் சப்தம் எல்லாமாகச் சேர்ந்துகொண்டு காது செவிடுபடச் செய்தன. எனக்குச் சமீபத்தில் "குழந்தாய்! ஐயோ! எங்கே நீ?" என்று கதறும் மஜ்லிஸ்கானின் தீனமான குரல் என் காதில் இந்தப் பேராவங்களினிடையே ஒலித்தது. அந்தப் பேய்க்கூத்தில் யாரை யார் தேடிக் கண்டுபிடிக்க முடியும்! போதாதற்கு பலத்த மழையும் வீசத்தொடங்கியது. பெட்டிகளுக்கும், மரச்சட்டங்களுக்கும் அடியிலே சமாதி யடைந்துவிட்டேனே என்று எண்ணிக்கொண்டிருந்த நான், எப்படியோ திக்குமுக்காடித் திணறி மெதுவாகக் கையையும் காலையும் விடுவித்துக்கொண்டு நுழைந்து புறப்பட்டேன். வண்டிக் கடைசியில் ஒருநெருப்புக்குச்சி எரிந்து அணைவது தெரிந்தது. வேறு வெளிச்சமே இல்லை. துணிமணிகள் நனைந்துவிட்டன. குளிர் தாங்கமுடியவில்லை. 'மஜ்லிஸ்கான், மஜ்லிஸ்கான்!' என்று குரல் கிழிந்து போகும்படியாகக் கூப்பிட்டேன். பதிலே இல்லை.

"பெனுல் ரயில் விபத்தைப் பற்றி நீங்கள் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். அந்த கோரமான விபத்தில் தப்பிப் பிழைத்தவர்கள் புனர்ஜன்மம் அடைந்தவர்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

ஒரு பெரிய கால்வாயின் பாலத்தின் மீதிருந்த தண்டவாளம் புரட்சிக்காரர்களால் விலக்கப்பட்டோ, அல்லது தானாக விலகியோவிருந்தது. எஞ்சினும், அதற்கடுத்த இரண்டு வண்டிகளும் கால்வாயில் பிரவேசித்துவிட்டன. மூன்று வண்டிகள் புரண்டு விழுந்துவிட்டன. நாங்கள் இருந்தது கடைசி வண்டிக்கு ஒரு வண்டி முந்தியது. அது சாய்ந்து மட்டும் இருந்தது. நான் ஜன்னல் வழியாகக் கீழே விழுந்துவிட்டேன். அந்த வண்டி நல்லவேளை, என்மீது புரளவில்லை. புரண்டிருந்தால் இந்தக்கதையை நான் உங்களுக்குச் சொல்லிக்கொண்டிருக்கமாட்டேன். வெகுநேரம் ஒன்றுமே புரியாமல் நாங்கள் தவித்துக்கொண்டிருந்தோம். அப்புறம் மொகல்ஸ்ராயிலிருந்து ஒரு தனி வண்டி வந்தது. விளக்குகளும் தீப்பந்தங்களும் நடமாடின. அப்பொழுது மழை நின்றிருந்தது. என்ன பீபத்ஸமான காட்சி! எத்தனை மனிதர்கள் அலங்கோலமாகக் கிடந்தனர்! வாழ்க்கையின் முற்றுப்பெருத உத்தேசங்களுடன் அவர்கள் வாழ்க்கையைக் கடந்து விட்டனர். அந்தக் கண்ருவியைப்பற்றி அதிகம் வேண்டாம். ராவ்பகதூரைப் பாராட்ட நீங்கள் கூடியிருக்கும் இந்தச் சந்தோஷகரமான சமயத்தில் விதியின் அந்தக் கோரத் தாண்டவத்தைப் பற்றி அதிகமாக நான் சொல்ல விரும்பவில்லை.

"ஒருவிளக்கின் ஒளியில் என்கையைப் பார்த்தேன். ஐயோ, என்ன சிவப்பு? ரத்தம்! தலையை மறுபடியும் தொட்டுப் பார்த்தேன். ரத்தம் கசிந்துகொண்டிருந்தது. எனக்கு மயக்கம் வந்துவிடும் போலாகிவிட்டது. என்ன டாக்டர், ரத்தம் இவ்வளவு பெருகியது என்பது தெரிந்த பிறகு மயக்கம் வருவதற்குக் காரணம் என்ன? இருட்டிலேயேகூட ரத்தம் பெருகிக்கொண்டுதானிருந்திருக்க வேண்டும். பீதி! நம்முடைய கற்பனை தான் நம்முடைய பலஹீனத்திற்குக் காரணம். எப்படியோ ஒருவிதமாக என்னை நானே சமாளித்துக்கொண்டு ஒரு தீப்பந்தத்தை வாங்கிக்கொண்டு வண்டியருகில் சென்றேன். உள்ளே ஏறும் வழியில் கதவில் சாய்ந்து கொண்டு மஜ்லிஸ்கான் உட்கார்ந்திருந்தான். அவனுடைய மடியில் இந்தப் பெண் கிடந்தாள். அவளுடைய நெற்றியில் பலமான காயம். என்னைப் பார்த்ததும் அவன் விபரீதமாகக் கூச்சலிட்டான். மகளைக் கீழே கிடத்திவிட்டு எழுந்திருந்து தன் தலைப்பாகையால் என் நெற்றியில் ஒற்றினன். அதிலே ரத்தம் சுவறியது. 'பரவாகஇல்லை மஜ்லிஸ்கான்!' என்றேன். அவன் தன் ஈரமான தலைப்பாகையைக் கிழித்து என் தலையில் இறுக்கிக் கட்டினன். பிறகு மெள்ள கனகலதாவை நானும் அவனும் புதிய ரயிலுக்கு எடுத்துச்சென்ருேம். அவளுக்கு பிரக்ஞை உண்டாக்க எவ்வளவோ முயன்ருேம். அவள் வெகுநேரம் கழித்துக் கண்விழித்து விலாப்புறத்தைத் தடவிக்கொண்டாள். அவள் விம்மல் திடீரென நின்றுவிட்டது. தொட்டுப் பார்த்தேன். உட்புறமாக விலாவெலும்புகள் முறிந்துவிட்டன என்பதை உணர்ந்தேன். அவன்,எல்லாம் அல்லாஹ்தஆலாவின் வேலை என்று ஆண்டவன்பேரில் பெரிய பாரத்தைப்போட்டான்.

"நாங்கள் மோகல்ஸ்ராய் ஸ்டேஷனுக்கு வந்துசேர்ந்தோம். அங்கே இரண்டு நாட்கள் தங்கினேம். கனகலதாவின் மார்பிலும் வயிற்றிலும் சுற்றபட்டிருந்த துணிக்கு அளவில்லை. அங்கேயிருந்த சிறிய ஆஸ்பத்திரியில் சரியாகக் கவனம் இருக்காது என்று எண்ணி பனாரஸுக்கு வந்தோம். பிரின்ஸ் ஆப் வேல்ஸ் ஆஸ்பத்திரியில் அவளைச் சேர்த்துவிட்டு நான் மஜ்லிஸ்கானிடம் விடைபெற்றுக்கொண்டு லக்ஷ்மணபுரிக்குப் போய்விட்டேன். அதற்குப் பிறகு இப்போது தான் மறுபடியும் இவர்களைச் சந்திக்கிறேன். ஆனல் முதலில் எனக்கு இவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை" என்று கூறி முடித்தேன்.

நான் இருவரையும் மறுபடியும் நன்ருகக் கவனித்தேன். குறுகுறு என்று பரபரப்புடனிருந்த அந்தச் சிறுமியா

I.T.L.

குழந்தைகளுக்கு ஆரோக்யம் அளிக்கிறது

எதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம்பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினால் ஏற்பட்ட தாங்கொணாத வலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ. டி. எல். உடனடியானசிகித்ஸை செய்வதோடு, மேற்கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வாராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலை வைத்திருங்கள்.

கிரைப் சிரப்

கவர்மெண்டு
இண்டஸ்டிரியல் & டெஸ்டிங்
லேபரடரி, மல்லேசுவரம், பெங்களூர்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்,
தபால் பெட்டி 63, மதராஸ்.

இப்பொழுது மான்போன்று மருண்டு நோக்கும் கனகலதா? அவளுடைய நெற்றியில்பட்ட அடியின் நினைவுச்சின்னமா இந்தப் பிறைபோன்ற வடு?

நண்பர்களில் சிலர் ரொம்ப அநுதாபம் காண்பிப்பதுபோல, 'த்ஸ த்ஸ' என்றார்கள். சிலர் 'இதெல்லாம் என்ன? ரொம்ப சாமான்யமான விஷயம்; பிரமாதம்! பத்திரிகையில் அடிக்கடி வருகிற விஷயம் தானே' என்று எண்ணுவதுபோல அலட்சியமாகப் புன்னகை செய்தார்கள். உலகம் பலவிதம்.

"மஜ்லிஸ்கான்! இவ்வளவு நாட்களாக எங்கே இருந்தீர்கள்? இந்தப்பக்கம் எப்போது வந்தீர்கள்?" என்று ஹிந்துஸ்தானியில் வினவினேன். மஜ்லிஸ்கான் சொல்லத்தொடங்கினன். அவன் தமிழிலேயே பேச ஆரம்பித்து விட்டான். எனக்கு ரொம்ப வியப்பாக இருந்தது. நண்பர்கள் அவன் சொன்னதையும் கேட்கலானார்கள். அவன் பேசியது கொச்சையான தமிழில். அதைத்திருத்தி எதோ ஞாபகம் இருக்கும் வரையில் எழுதுகிறேன்.

"பனாரஸ் ஆஸ்பத்திரியில் இரண்டு மாதம் கனகலதா இருந்தாள். எனது சாமான்களையும், ஸாரங்கியையும் ரயில்வேயிலிருந்து வாங்கிக் கொண்டேன். பெட்டிகள் நசுங்கிப்போயிருந்தன. சாமான்கள் தாறுமாருகவிருந்தன. ஸாரங்கி உடைந்துபோயிருந்தது. அவை இருந்திருந்தாலும் நான் ஏழைதான். ஆனால் அப்போது ஒன்றுமேயில்லாத பரம ஏழையாகிவிட்டேன்."

பிறகு நான் என் மகளை அழைத்துக்கொண்டு ஊர் ஊராக அலைந்தேன். எப்படி ஜீவனம் செய்கிறது என்ற கவலையே பெரிதாகப் போய்விட்டது. எல்லைமீறிய சௌக்கியத்தை யடைந்த காலத்தையும் பார்த்திருக்கிறேன். இப்படிப்பட்ட காலத்தையும் தான் பார்த்திருக்கிறேன். கொஞ்சநாட்கள் அங்கும் இங்கும் சிட்சை சொல்லிக்கொடுத்துக் கொண்டு வயிறு வளர்த்தேன். ஜத்தன் பாய் தன்னுடைய ஞாபகார்த்தமாக விட்டுச்சென்ற இந்தப்பெண்ணை ஒரு ஹிந்துப் பெண்ணாகவே வளர்க்கவேண்டுமென்று பிரயத்தனம் செய்தேன். இந்தப்பெண்ஒருத்தியின் பொருட்டேதான் நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.

உலகப் போக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறத்தொடங்கியது. ஆனால் என் ஸங்கீதம்மாறவில்லை. நாடகம்கூட நின்றுபோய்விட்டது. மேல் நாட்டிலிருந்து ஸினிமாவந்தது. அத்துடன் மேல்நாட்டு ஸங்கீத பாணிகளும்வந்துவிட்டன. ஸங்கீதத்தில் 'ஆர்ச்சஸ்ட்ரா' முழக்கம் அதிகமாகிவிட்டது. அர்த்தமில்லாத சப்தம் தான் அதிகம். வித்வத்திறமைக்கு மதிப்பில்லை. கச்சேரிகள் வெகுவாகக் குறைந்துவிட்டன. ரேடியோவினல் ஸங்கீதம் மலிந்து போய்விட்டது. பாமர ஜனங்களும் கேட்கிருர்கள். அவர்களைத் திருப்தி செய்யவேண்டியது ஸங்கீதத்தின் முதல் நோக்கமாகிவிட்டது. சுருதி, மானம், லயம் ஒன்றும் கிடையாது. கட்டுப்பாடே யில்லாமல் ஸங்கீதம் கீழ்நிலைக்கு வந்துவிட்டது. இப்போது 'துருபத்' யார் ஒழுங்காகப் பாடுகிருர்கள்? துருபத் பாடுகிறவர்களைப் பழைய பஸலி, மீர்காஸிம்காலம், ருபிப்போ என்று ஜனங்கள் சொல்கிருர்கள். சாஸ்திர விரோதமான ஸாஹித்யங்களும், வழிகளும் ஏற்பட்டுக் கேவலமான ஸ்திதிக்கு வந்துவிட்ட ஸங்கீதத்தைப் பின்பற்ற எனக்குக் கொஞ்சங்கூட சம்மதம் ஏற்படவில்லை. கேட்பாரற்றுக் கிடந்தேன்!" என்று சொல்லி நிறுத்தினன் அவன்.

"அப்புறம், ஜீவனத்திற்கு நிரந்தரமாக எதாவது ஒரு வழிவேண்டுமே" என்று கேட்டேன் நான். அவன் சிரித்துக் கொண்டே "காலத்தை நாம் வெல்ல முடியாது என்பது வாஸ்தவம். காற்று வீசும்பக்கம்தான் தூற்ற வேண்டும். கையிலே காசில்லாமல் ஊர் ஊராகப் பட்டினியுடன் அலைந்து எங்கும் நிலைமையில் நான் என்ன செய்வது? பெரிய பெரிய அறிஞர்களுக்கு முன்னல் ஸாரங்கி வாசித்து அவர்களை சிரக்கம்பம் செய்யும்படி மகிழ்வித்த எனக்கு, கீழ்ப் படிக்கு இறங்க மனம் வராமலேதானி

ருந்தது. ஆனல் வேறு வழியில்லை. தற்கால ஸங்கீதத்தை நான் பெரிய விஷயமாகவே நினைக்கவில்லை. ஒரு ஸினிமாக்கம்பெனியில் நான்கு வருஷங்கள் ஸாரங்கி வாசித்தேன். கனகலதாவுக்கும் பிராசீன வழிகளில் ஸங்கீதம் அப்பியாசம் செய்துவைத்துக்கொண்டிருந்தேன். எனக்கென்னவோ நாலு காசு வருகிறதென்று முறைப்பிசகாக ஸங்கீதத்தைப் பாழாக்கஇஷ்டமேயில்லை. நான் நாலு வருஷங்களில் சேர்த்துவைத்திருந்த பணத்தை யெடுத்துக்கொண்டு கனகாவையும் அழைத்துக்கொண்டு பங்களூருக்குவந்து அங்கே கொஞ்சநாள் தங்கினேன்."

ராவ்ஸாஹிப்—இல்லை, ராவ்பகதூர் அவர்கள் அங்கும் இங்கும் திரும்பிப் பார்த்துக்கொண்டு கடிகாரத்தைக் கைக்கும் பைக்குமாக மாற்றிக்கொண்டிருந்தார். உங்களையும் என்னையும்போல அவருக்கு இந்த நிஷ்பிரயோசனமான கதைகளைக் கேட்பதில் இஷ்டமே யில்லை. திவான்பகதூர் பட்டத்தின் பேரிலேயே அவருடைய குறி இப்போது தாவி இருந்தது. நேரமாவதைச் சொல்லாமல் சொல்லியறிவிக்கவே இந்த அபிநயம் செய்துகொண்டிருந்தார். முகபாவத்திலும் அவருடைய அகத்தின் அருவருப்புத் தெரிந்தது.

நண்பர்கள் சிலர் எழுந்து போயினர். "மஜ்லிஸ்கான், சீக்கிரம் சொல்லு" என்றேன் நான். விஷயங்களை அனுவசியமாக விஸ்தரித்துப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்பதற்கு எனக்குக் கட்டோடு பிடிக்காது.

"விஷயம்வேறுஒன்றுமில்லை.கனகலதா கச்சேரிசெய்யக்கூடிய தகுதி யடைந்துவிட்டாள். அவள் ஸம்பிரதாயமான வழிகளில் மட்டுமே பாடவேண்டுமென்பது என் அபிலாஷை. தமிழ்நாட்டிலே நான் பல இடங்களுக்கும் போயிருக்கிறேன். தமிழர்கள் மிகுந்த விசாலமான நோக்கத்துடன் எந்த பாஷையாக இருக்கட்டும், யாருடைய கலையாக இருக்கட்டும் எல்லாவற்றையும் ரஸிக்கிறார்கள். மாகாணம், வகுப்பு வரையறைகளைத்தாண்டி அவர்களுடைய ரஸிக்கும் தன்மைபெருகுகிறது. நான் அறிந்தவரையில் இந்தியாவின் இதர பிரதேசங்களில் இந்த மனேவிசாலம் இல்லவே இல்லை" என்று சொன்னன்.

நான் மஜ்லிஸ்கானிடம் விடைபெற்றுக்கொண்டு டாக்டர் நண்பரை அழைத்துக்கொண்டு புறப்பட்டேன். பிரியும்போது அவன் என்னைப்பார்த்துப் புன்னகை செய்தான். அந்தப் புன்னகையிலே ரகஸ்யமான மனேவேதனையும் ஒளிந்திருந்தது. "கழிந்த நாட்களைப் பற்றி விசாரப்படலாகாது. காலசக்கரம் சுழன்றுகொண்டே யிருக்கும்போது மாறிமாறி இன்பமும், துன்பமும் வந்துகொண்டே யிருக்கின்றன" என்று அவன் சொன்ன கடைசிவார்த்தைகள் என் காதுகளில் இன்னும் அப்படியே கேட்டுக்கொண்டிருக்கின்றன.

50 வருஷ அனுபவத்தில் உள்ளது. பிரபல டாக்டர்களால் உபயோகிக்கப்பட்டு நற்சாட்சிப் பத்திரம் பெற்றது.

எல்லா ஊர் ஷாப், மளிகை, இங்கிலீஷ், நாட்டு மருந்து கம்பெனிகளில் கிடைக்கும்.

மாவித்துக்கள் ஆகாரமாகின்றன

மொழிபெயர்ப்பு: கண்ணன்.

மாவித்துக்களை ஆகாரமாகஉபயோகிப்பது கஞ்சம் ஜில்லாவைச்சேர்ந்த காண் (Kond) குன்றுகளில் வசிக்கும் ஜனங்களிடையே காணப்படுகிறது. அது இந்தியாவில் இன்னும் சில இடங்களில் காணப்பட்டாலும் அவ்வளவு விஸ்தாரமாகப் பரவவில்லை. ஏழைகள் அதை ஆகாரத்திற்குத் திண்டாட்டமாகவுள்ள காலங்களில், அதாவது ஆவணி புரட்டாசிமாதங்களில் உபயோகிக்கின்றனர். பணக்காரர்கள்கூட இதைத் தங்கள் மற்றஆகாரங்களுக்கு ஓர் உபகரணமாக (சேர்கை) உபயோகிக்கின்றனர். அவர்கள் தயாரிக்கும் விதமும், மனித ஆகாரத்திற்கு அது எவ்வளவுதூரம் உபயோகப்படுகிறது என்ற விஷயமும் அவச்யம் ஆராயவேண்டியது.

மாம்பழ நாட்களில் கொட்டைகளைச் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். ஆகஸ்ட் மாதக்கடைசியில் அக்கொட்டைகளை உடைத்து அதனுள்ளிருக்கும் வித்துக்களை எடுத்து மறுநாட்காலை வரையில் அவைகளைத் தண்ணீரில் ஊற வைக்கவேண்டும். பிறகு அவைகளை நன்றாய்ப் பொடி செய்யவேண்டும். பொடி செய்த ஈர மாவை விலத்தியாக முடையபட்டதோர் கூடையில் போட்டு நன்றாகத்தட்டி ஓர் குச்சியால் அக்கூடையின் அடிப்பாகம் வரையில் அநேக துவாரங்கள் செய்யவேண்டும். வீட்டில் உஷ்ணமான இடங்களில் அக்கூடையை மறுநாட்காலை வரை வைத்திருக்கவேண்டும். பிறகு அக்கூடையை ஓடும் தண்ணீரிலோ அல்லது குழாயிலோ பிடித்தால் அக்கூடையில் ஜலம் நிறம்பி அதிலுள்ள துவாரங்களின் மூலம் வடிந்து விடும். இவ்விதம் அதன் ருசி மாறும் வரை கழுவவேண்டும். ஓடும் தண்ணீரோ, குழாயோ இல்லாத இடங்களில் குளங்களிலேனும், துறவுகளிலேனும் கழுவலாம். இது சுமார் அரைநாள் பிடிக்கும். அதன்பிறகு அந்தமாவை உலர்த்தவேண்டும். பின்பே இதை அவரவர்களுக்கு இஷ்டப்பட்டபிரகாரம் வடைகளாகத்தட்டி இலைகளைச் சுற்றி வேகவைத்தோ, அல்லது நெருப்பிலிட்டு சுட்டோ, அரிசியுடன் கலந்து சமைத்தோ, உருண்டைகளாகச் செய்து அடுப்புக்கும்பிகளிலிட்டு வேகவைத்தோ (அதாவது சிலர் சக்கரவள்ளிக் கிழங்கை வேகவைப்பதுபோல்) உபயோகிக்கலாம். அதைப் பசும் இலைகளில் சுற்றி மண்பாண்டத்தில் வேகவைப்பதும் ஓர்வழிதான். இவ்விதம் தயாரிக்கப்பட்ட மாவு அதிககாலிராதாகையால் சீக்கிரமே உபயோகிக்கவேண்டும். இது ஆண்பெண் சகலராலும் உண்ணப்படுகின்றது.

கூனூர் ஜீவியசத்து ஆராய்ச்சிசாலையைச் சேர்ந்த டாக்டர் W. R. ஆய்க்ராய்ட் என்பவரிடம் இந்த மாவின் ஆகாரகுணத்தைப் பரிசோதிப்பதற்காக அனுப்பப்பட்டது. அவர் எழுதுவதாவது:—

மேற்கூறியபடித் தயாரிக்கப்பட்ட மாவில் கீழ்க்கண்டவாறு சத்துப் பொருள்கள் அமைந்துள்ளன:—

ஈரம் சைப்பு	8·74
ப்ரொடீன்	5·56
கொழுப்பு	16·13
தாதுப்பொருள்	0·35
கார்போஹைட்ரேட்	69·22
கால்ஷியம்	0·09
பாஸ்பரஸ்	0·02
இரும்பு	6·49 mg.

அவை கருமை, மங்கின சிவப்புநிறம், ருசிக்குறைவு, வாசனையுள்ளது, கண்டுபிடிக்கப்படாத எண்ணைப் பதார்த்தம் இவற்றுடன் கூடியது. அரிசியைக் காட்டிலும் ப்ரொடீன் பதார்த்தம் மிகக் குறைவாகவுள்ளதே. எண்ணைச் சத்துக்கள் தேகத்திற் சேருமானால் அரிசியை விட இது சற்று உயர்ந்ததாகவே கூற வேண்டும். இதில் ஒருவித விஷக்கலப்புமில்லை என டாக்டர்கள் கூறுகின்றனர். எல்லோரும் இதைப் பஞ்சகால ஆகாரமாக உபயோகிக்கலாம் எனக் கருதப்படுகிறது.





வேண்டுமென்றே

உங்களை

அவர்கள்

குறிபார்க்கவில்லை



ஆனல் அவதிப்படும் துர்பாக்கியசாலிகளில் ஒருவராக நீங்கள் ஆகலாம். தலைவிதி அப்படி இருந்தால், நீங்கள் அந்தக் கொடுமைக்கு ஆளாவதிலிருந்து தப்ப முடியாது! ஆனல் நீங்கள் **இன்ஷுரன்ஸ்** மூலம் உங்கள் குடும்பத்தை காப்பாற்றிவிட முடியும்.

விவரங்களுக்கு எழுதுக:

நேஷனல் இன்ஷுரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு: 362, சைனு பஜார் ரோடு, எஸ்ப்ளனேட், சென்னை.

மதிப்புரை

ஸ்ரீ ஸதாசிவேந்திரப் பிரும்மம் அருளிய நூல்கள்

ஸ்ரீ. என். சிவராம கிருஷ்ணையரவர்கள் எம். ஏ. எம். எல்

தென்னிந்தியாவில் காவேரிக் கரையில் கரூருக்கு ஏழாவது மைலில் நெரூர் என்னும் ஸ்தலம் பிரசித்தி பெற்றது. காவேரிக்கரையில் உதித்தவர்களில் சிறந்த பிரும்ம நிஷ்டர்களிலே பிரும்மம் என்று பெயர் பூண்டவர்கள் தியாகப்பிரும்மம், ஸதாசிவப்பிரும்மம். கான சாஸ்திர ஆராய்ச்சியால் தியாகப்பிரும்மத்தின் மஹிமை சீக்கிரத்தில் எங்கும் பரவியது. ஞான மார்க்கத்தில் ஈடுபட்டு ஸத்குருவின் உபதேசத்தால் ஆத்ம நிலையை நன்குணர்ந்து அந்த நிலையிலேயே ஆழ்ந்திருந்து எல்லோரும் அந்த நிலையை உணரும்படி உபதேசித்த மஹான் ஸதாசிவப் பிரும்மம். காவேரி தீரத்தில் அவதரித்து கலைகளைக் கற்று பண்டிதத் திறமையைப்பெற்று இறுதியில் மௌனியாகவும் யோகியாகவும் இருந்து காவேரி தீரத்திலேயே ஸமாதியிலிருக்கிற ஸதாசிவப் பிரும்மத்தைப்பற்றிக் கர்ண பரம்பரையாகப் பல வரலாறுகள் வந்துள்ளன. காலக்கிரமத்திலே, பெரியோர் இவ்வாறு பல விசித்திரமான லீலைகளைச் செய்தார்கள் என்று ஜனங்கள் மனதுக்கேற்றபடி சொல்லி வருவது ஸஹஜமே; ஆயினும், இவ்வற்புதங்களில் மட்டுமே மனதைச் செலுத்தாமல் இந்த மஹானுடைய உபதேசமொழிகளில் ஒரு சிலவற்றையேனும் நாம் உணர்தல் வேண்டும் என்றே நமது ஸ்ரீ ஆசார்யர்களின் ஆஞ்ஞையை முன்னிட்டு ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் முதல் வெளியீடாக ஸ்ரீ சதாசிவப் பிரும்மத்தின் நூல்கள் இரண்டையும், கீர்த்தனங்களையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆதி சங்கரரின் பஜகோவிந்தம் என்னும் பாடலானது எப்படி அகில இந்தியாவிலும் எல்லோருக்கும் தெரியுமோ அப்படியே தென் இந்தியாவிலே 'சிந்தா நாஸ்திகில' என்ற கீர்த்தனை. ஏற்கெனவே ஸ்ரீ ஸதாசிவேந்திரர்களின் கீர்த்தனைகள் பத்தொன்பதையும் 'ஆத்ம வித்யா விலாஸம்' என்னும் நூலையும் ஸ்ரீ வாணீ விலாஸ அச்சுக்கூடத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அவருடைய சிவமானஸிகபூஜை இதுவரை அச்சானதாகத் தெரியவில்லை. காமகோடி கோசஸ்தானப் பதிப்பில் வேறு தெலுங்கு லிபியிலுள்ள பதிப்பினின்றும் நான்கு கீர்த்தனைகளும் சேர்த்திருக்கிறார்கள்.

காமகோடி கோசஸ்தானத்திலே இந்த மூன்று கிரந்தங்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டிருப்பது பேருபகாரமாகும். மொழிபெயர்த்தெழுதுவதில் மூலத்திலுள்ள சுவைகளில் அனேகம் குன்றவும் மாறுபடவும் கூடும். மொழிபெயர்ப்பதும் சிற்சில இடங்களில் முடியாதென்றே தோன்றும். இப்பொழுது வெளியிடப்பெற்ற மொழிபெயர்ப்பிலே தமிழிலும் ஆங்கிலத்திலும் சொற்சுவை பொருட்சுவை மிக்க இனிமையாகவே அமைந்திருப்பதால், ஸம்ஸ்கிருதபாஷை தெரியாதவர்களும் மொழிபெயர்ப்பை வாசித்தாலே ஸதாசிவப் பிரும்மத்தின் மனோநிலையையும் உபதேசமொழிகளின் கருத்தழகையும் நன்குணர இயலும். 'ப்ரூஹிமுகுந்தேதி' என்னும் கீர்த்தனத்தில் 'ப்ரூஹி'. என்பதற்கு இங்கிலீஷில் Chant (சாண்ட்) என்று மொழிபெயர்த்திருப்பதைப் பார்த்தாலே ஸ்ரீ வே. நாராயணன் சிறந்த நூலாசிரியர் என்று சொல்லவும் வேண்டுமோ? இதற்குமுன் அநேக கிரந்தங்களை மொழிபெயர்த்தும் தமிழ் லெக்ஸிகனிலே சிரம்பப் பாடு பட்டும் பழகியதின் பயனோ, அல்லது ஸதாசிவப் பிரும்மத்தின் அநுக்ரஹமோ, இப்போது வெளியிட்டிருக்கிற மொழிபெயர்ப்பானது வெகு ருசிகரமாயிருக்கிறது.

'ஆத்ம வித்யா விலாஸம்' என்னும் நூல் ஞானநிலையை உபதேசிக்கும் கிரந்தம். இதிலே, தன் குருவின் நிலையைப்பற்றியே ஆர்யா விருத்தத்தில் பாடியிருக்கிறார்கள், அந்த குருபரம சிவேந்திரர்கள். அவர்கள் அதிஷ்டானம் திருவெண்காட்டில் மேற்குநோக்கியிருக்கிறது. குரு, சிஷ்யர்கள் ஆகிய இருவர் ஸமாதிகளின் படமும் நமது ஆச்சார்யார்கள் படமும் இப்பதிப்பிலே காணப்படுகின்றன. நெரூர் சிவாலயத்தின் படமும் அமைந்திருக்கிறது. சிவமானஸிகபூஜையின் கருத்தை அநுசரித்து ஸ்ரீ ஸி. சிவராமமூர்த்தி அவர்கள் எழுதிய அர்த்தநாரீசுவரப் படமும் ஸதாசிவப் பிரும்மத்தைத் தியானித்து அவ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

ஆதி குமரகுருபர சுவாமிகள்

ஞாபகார்த்த

சைவசித்தாந்த சாத்திரப் பரிசு.

ரூ 1,000/- (ஆயிரம்)

விவரங்களுக்கு:—

தஞ்சாவூர் ஜில்லா, திருப்பனந்தாள் காசிமடத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

குறிப்பு:— ஷை பரிசுக்குரிய எண்டௌமெண்டு அண்ணமலை யுனிவர்ஸிட்டி ஸின்டிகேட் செனட் மீட்டிங்குகளில் முறையே 30-1-43, 27-3-43-ந் தேதிகளில் அங்கிகாரம் பெற்றிருக்கிறது.

ரது உருவத்தை எல்லோருடைய தியானத்திற்கும் அநுகுணமாக எழுதிய படமும் இப்பதிப்பை அலங்கரிக்கின்றன.

இந்தப் புஸ்தகம் ஆஸ்திகர்கள் அனைவருக்கும் மிகுந்த பயனை அளிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. முகவுரையிலே கூறியவாறு, "ஸதாசிவப் பிரும்மத்தின் கருணையைப் பெற்றால், காமியும் எல்லாக் காமங்களையும் வென்றவனாவான். கொடியவனும் பரம சாந்தனாவான். அறிவீனனும் பேரறிவாளனாவான் என்பது ஆன்றோர் வாக்கு. ஆதலால், ஸதாசிவப் பிரும்மத்தை அடிவணங்கியும், அவர்களுடைய திருவாக்குகளைப் பயின்றும், கீர்த்தனங்களைப் பாடியும் நாம் அனைவரும் அஞ்ஞானம் நீங்கப் பெறுவோமாக."

ஸ்ரீ ஸதாசிவேந்திர ப்ரஹ்மம் அருளிய சிவமானஸிக பூஜா: கீர்த்தனங்கள்: ஆத்மவித்யாவிலாஸம்: என்னும் ஸம்ஸ்கிருத நூல்களும், ஸ்ரீ வே. நாராயணன் எம். ஏ., எம். எல்., செய்த தமிழ் ஆங்கில அநுவாதங்களும்: ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் திவ்ய ஸ்ரீமுகத்துடன்.

விலை அணா **10**: தபால் செலவு அணா **2**.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்,
ஸ்ரீ சங்கராமடம், கும்பகோணம்.

கண்களுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியை
தந்து கூந்தலை வளர்ப்பது
ஸ்ரீ மணி ஹெர்பல்
கூந்தல் தைலம்.
மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
லோடஸ் லேபாடரீஸ், பொறையார் P. O.

குமரி மலர்

[மாதப்பதிப்பு. சிறந்த அறிவாளிகள், புதுமலர்ச்சி எழுத்தாளர்கள், முதலியோரின் அநுபவ பூர்வமான கட்டுரைகளும், கற்பனைச் சிறு கதைகளும், நிறைந்தது. விலை ரூபாய் ஒன்று. நிர்வாக ஆசிரியர் ஏ. கே. செட்டியார். கிடைக்குமிடம் "கனக ஸ்ரீ நகர்" கதீட்ரல் ரோடு P. O., சென்னை.]

ஸ்ரீ ஏ. கே. செட்டியாரவர்களால் பதிப்பிக்கப்பட்டு, சென்னையிலிருந்து வெளியாகும் "குமரிமலர்" முதலிரு புத்தகங்கள் வரப்பெற்றோம். செட்டியாரவர்கள் சிறந்த அறிவாளி என்பதும், உலகெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து, அதன் மூலம் பல உண்மைகளை நேரில் கண்டறிந்து, அறிந்தவற்றை அவ்வப்போது பத்திரிகைகளுக்கு எழுதி இலக்கிய சேவை மூலம் தாய் நாட்டுக்குச் சிறந்த தொண்டாற்றி வருபவர் என்பதும் யாவருமறிந்த விஷயம். உலக மஹா யுத்தத்தால் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்த நிலைமையிலும் இப்படி ஒரு மாத சஞ்சிகையை நடத்தத் துணிந்தது மிகவும் பாராட்டத்தக்கது.

"காகிதப் பஞ்சத்தை எவ்விதமாகவாவது சமாளித்து, நாட்டில் அறிவுப்பஞ்சம் உண்டாகாமல் தடுக்கவேண்டுமென்பது என் ஆவல்" என்று பதிப்புரையில் ஆசிரியர் கூறியிருக்கிறார். அவர் வெறுமனே அப்படிக் கூறவில்லை. புத்தகத்தில் செறிந்து கிடக்கும் விஷயங்கள் அவர் வார்த்தையை நிரூபிக்கின்றன. சிறந்த கட்டுரைகளாலும், உயர்தரக் கவிதைகளாலும், உள்ளமுருக்கும் கற்பனைச் சிறுகதைகளாலும், நிறைந்த குமரி மலர். உலகில் அறிவு வாசனையைப் பரப்புமென்பதில் சந்தேகமில்லை. காகிதம், அச்சு, பைண்டு எல்லாம் முதல்தரம். சாதாரண காலமாயிருந்தால் இதற்கு எட்டணா விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும். யுத்த நிலைமையை உத்தேசித்தும், உள்ளிருக்கும் விஷயங்களுக்காகவும் கூசாமல் ஒரு ரூபாய் கொடுக்கலாம்.

Edited & Published by K. S. Venkataramani. at No. 45, Mahadana Street, Mayavaram. printed by V. Ramamurthi B. A., at the Mirasdar's Welfare Press 29, Mahadana Street, Mayavaram.